உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு

மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி உ௰.] துந்துபி-௵ ஆனி-௴ [பகுதி ௮.

Vol. XX. June—July—1922. No. 8.

உள்ளுறை.

பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்

பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா-8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0,

Vol. XX

June—July 1926.

B. S.

V. P.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி ௨௰.] துந்துபி-௵ ஆனி-மீ [பகுதி ௮.
Vol. XX. June—July—1922. No. 8.

பாணினீய லகுதீபிகை.

[திருவநந்தபுரம் 'வடமொழிநூற்பிரசுரசாலை'யிற் பண்டிதராயிருக்கும் ஸ்ரீமாந். ஜி. ஹரிஹரசாஸ்திரியவர்களுடைய உதவியால், S. வையாபுரிப் பிள்ளை B.A., B.L., எழுதியது.]

ஸம்ஸ்கிருதபாஷையை 'வடமொழி', 'தேவபாஷை', 'ஆரியம்' எனப் பலவாறாகத் தமிழுலகிற் பெயரிட்டழைப்பர். இப்பாஷை யிப்பொழுது வழக்குவீழ்ந்துபோயிற்றெனினும், நமது இந்தியாதேசத்தில் வழங்கிவரும் பாஷைகளனைத்திற்கும் 'தாய்' எனத்தகும் உரிமைபூண்டு அவற்றை நாளிதுவரை வளர்த்துவருகிறதென்னும் உண்மை நடுவுநிலை குன்றாதார் யார்க்கும் தெள்ளிதிற் புலப்படும். தமிழ்மொழியும் மேலதற்கோர் விலக்கன்று; ஆனால் இம்மொழிக்குச் 'செவிலித்தாய்' எனவடமொழியைக்கூறுதலே பொருந்துவதாகும். அறிஞர்கள் பலர்க்கும் இதுவே அங்கீகாரமாம். இக்காலத்து ஸ்ரீமான் R. சுவாமிநாத ஐயரவர்கள்போன்ற கல்வியாளர்கள்சிலர் தமிழுக்கு 'நற்றாய்' வடமொழியெனஸ்தாபிக்கப் பெரிதும் முயன்றுவருகின்றார்கள். இவர்கள் கூறும் நியாயங்களைப் பாஷாசாஸ்த்ரவிற்பன்னர்கள் ஆராய்ச்சிசெய்து அறுதியானவொருமுடிபுக்குவரும்வரை, பொதுவாக அங்கீகரிக்கப்பட்டுள்ள கொள்கையைக் கைவிடுதல் உசிதமன்று.

வடமொழியைத் தமிழணங்கின்'செவிலித்தாய்' எனக்கூறுதற்குத் தக்ககாரணங்கள் இருக்கின்றன. முதலாவதாக நூல்வழக்கிலும் பேச்சு வழக்கிலுமாகத் தமிழிலுள்ளசொற்களில் ஒருபெரும்பகுதி வடமொழிப் பதங்களாம். நமது பாஷையில் இவ்வாறு வடசொல் புகத்தொடங்கியது இன்று நேற்றன்று. எக்காலத்து முதன்முதல் தமிழ்நூல்கள் தோன்றத் தொடங்கினவோ அக்காலத்துத்தானே வடசொற்களும் தமிழிற் பயின்றுவந்திருக்கின்றன. இதுபற்றியே 'இலக்கணக்கொத்து' இயற்றிய ஸ்ரீசுவாமிநாததேசிகரும் 'அன்றியுந் தமிழ்நூற் களவிலை யவற்றுள், ஒன்றே யாயினுந் தனித்தமி ழுண்டோ' என வினவுவாராயினர். ஆனால் இதனைத் தமிழிற்கோர் குறைபாடாகக் கருதுதல் தவறு; தமிழ் மக்களது அறிவுவளர்ச்சி காரணமாகவும் நாகரிகமுதிர்ச்சி காரணமாகவும் 'சொற்கடன்' ஏற்பட்டுளதென்பதை நாம் மறந்துவிடலாகாது. இரண்டாவதாக, நூற்குரியவிஷயங்களெனத் தமிழில் எடுத்தாளப்பட்டவற்றுள், பெரும்பாலன வடமொழிநூல்விஷயங்களாம். இதற்கு எடுத்துக்காட்டுக்களாகத் திருவள்ளுவரது திருக்குறளினையும் கம்பநாடரது இராமாயணத்தையும் கூறுதல் தகும். 'இவர் (திருவள்ளுவர்) பொருட்பாகுபாட்டினை அறம் பொருள் இன்பமென வடநூல்வழக்குப்பற்றி யோதுதலான்' எனவும், 'அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தனசெய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்' எனவும், 'தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப்பூண்ட வியாழ வெள்ளிகள் துணிபு தொகுத்துப்பின்னிதிநூலுடையார்கூறியவாறு கூறுகின்றமையின்' எனவும், 'ஈண்டுப் பிரிவினை வடநூன்மதம்பற்றிச் செலவு, ஆற்றாமை, விதுப்பு, புலவியென நால்வகைத்தாக்கிக்கூறினார்' எனவும் திருக்குறளுக்கு உரையிட்ட பரிமேலழகர் உரைத்திருக்கின்றார். கம்பநாடரும், 'தேவ பாடையி னிக்கதை செய்தவர்—மூவ ரானவர் தம்முளு முந்திய—நாவி னுருரை யின்படி நான்றமிழ்ப்-பாவி னலி துணர்த்திய பண்பரோ' என்று கூறினர். மூன்றாவதாக நூல்விஷயமேயன்றிச் செய்யுட்குரிய கவிமாபுமுதலியவற்றை நோக்கினும் இருபாஷைகளும் பெரும்பாலும் ஒத்தியல்கின்றன. இவ்வாறு, நமது வடமொழியுணர்ச்சி பெருகப்பெருக இருமொழிக்குமுரிய தொடர்பும் பலவகையாலும் வளர்ந்துகொண்டே செல்கின்றது. ஸம்ஸ்கிருத மொழியோடு சமமாக நிற்கக்கூடிய அளவில், தமிழை வளம்படுத்தவேண்டுமென்ற பேரவா தமிழ்நாட்டில் வேரூன்றிநின்றதென்பது

பலவாயில்களாலும் வெளிப்படுகின்றது. 'ஆரியத்தோடுறழ்தருதமிழ்த் தெய்வம்' என்றும், 'இருமொழியும் நிகரென்னு மிதற்கையமுளதேயோ' என்றும் வருவன மேற்கூறியதனை வற்புறுத்துகின்றன. ஈண்டு எழுதிய வற்றைநோக்கும்போது வடமொழி தமிழுக்குச் செவிலித்தாயாக நின்ற தென்பதில் வியப்பொன்றும் இல்லை.

மொழியின்வரம்பினை வகுத்துக்கூறும் இலக்கணவிஷயத்திலும் வடமொழிக்கு நமதுமொழி பெரிதுங் கடப்பட்டிருக்கின்றது. தமிழுக்கு ஆதியிலக்கணம் அகத்தியமுனிவராற் செய்யப்பட்ட அகத்தியம் என்றும், இதற்குப்பின் தோன்றியது தொல்காப்பியராற் செய்யப்பட்ட தொல்காப்பியம் என்றுங் கூறுவர். இவையிரண்டற்கும் முறையே பாணினீயமும் ஐந்திரமும் முதனூலாமென்பர் பிரயோகவிவேகநூலார். இவரதுகருத்தொடு சிறிதுமுரணி 'விடை யுகைத்தவன் பாணினிக் கிலக்கண மேனாள்—வட மொழிக்குரைத் தாங்கியன் மலயமா முனிக் குத் - திட முறுத்தியம் மொழிக்கெதி ராக்கிய தென்சொல்' எனவும், "வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத் - தொடர் புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங் - குடமுனிக்கு வலியுறுத்தார்கொல்லேற்றுப்பாகர்" எனவும் இலக்கிய இலக்கணத்துறை முற்றிய இருவர் கூறியிருக்கின்றார்கள். வடமொழியிலுள்ள புராதன வியாகரணங்களுக்குத் தொல்காப்பிய முதலிய தமிழிலக்கணங்கள் கடப் பட்டுள்ளனவென்பது மேற்குறிக்கப்பட்டோரனைவர்க்கும் அங்கீகாரமாம். இது கர்ணபரம்பரைக் கட்டுக்கதையுமன்று. நூலாராய்ச்சிசெய்து உண்மை நோக்குமிடத்தும் இக் கடப்பாடு யதார்த்தமேயென்பது விளங் கும். உதாரணமாக இரண்டொன்று காட்டுதல் மிகையாகாது. பாணினி முனிவரியற்றியசிக்ஷையில் 'அஷ்டௌ ஸ்தாநாநி வர்ணாநாம் உர: கண்ட: ஸிர: ததா ஜிஹ்வாமூலம் ச தந்தாஸ்ச நாஸிகோஷ்டௌ ச தாலுச' என்பது காணப்படுகின்றது. இதனோடொப்ப எழுத்ததிகாரத்தில், பிறப்பியலில்,

'...தலையினு மிடற்றினு நெஞ்சினு நிலைஇப்
பல்லு மிதழு நாவு மூக்கு
மண்ணமு முளப்பட வெண்முறை நிலையா
னுறுப்புற் றமைய நெறிப்பட நாடி
யெல்லா வெழுத்துஞ் சொல்லுங் காலைப்
பிறப்பி னாக்கம் வேறுவே றியல
திறப்படத் தெரியுங் காட்சி யான'

எனத் தொல்காப்பியர் சூத்திரமியற்றினர். 'ஸுப்திங்ந்தம் பதம்' என்பது பாணினியம். இதற்கேற்பத் தொல்காப்பியரும் 'சொல்லெனப் படுப பெயரே வினையென் றாயிரண் டென்ப அறிந்திசி னோரே' என்று கூறியிருக்கின்றனர்.

இங்ஙனமாக நமது தாய்மொழிக்கும் வடமொழிக்கும் மிக நெருங்கியதொடர்பு ஏற்பட்டிருக்கின்றது. திராவிடமகாபாஷ்யகர்த்தராகிய ஸ்ரீ சிவஞானசுவாமிகளும் 'வடமொழியுணர்ந்தார்க்கன்றித் தமிழியல்பு விளங்காது' எனத் தமது 'முதற்சூத்திரவிருத்தி'யிற் கூறினர். ஆகவே வடமொழியுணர்ச்சி தமிழ்கற்றார்க்கெல்லாம் இன்றியமையாததாயிருக்கின்றது.

ஆயினும், பற்பல காரணச்செறிவால், தமிழ்மக்களிடையே வடமொழியுணர்ச்சி குன்றிக்கொண்டேவருகிறது. இதற்கு வடமொழியை யெளிதிற்கற்றுக்கொள்ளுதற்குத்தக்கபடி தமிழில் இலக்கணம் முதலிய கருவிநூல் இல்லாமை யொரு முக்கிய காரணமெனத் தோன்றுகிறது. பேச்சுவழக்கிலிருக்கும் பாஷைகளை யிலக்கணவுதவியின்றியே நாம் கற்றுக்கொள்ளுதல்கூடும்; வழக்குவீழ்ந்தபாஷைகளை யிலக்கணவாயிலாக வன்றிப் பிறவாறு உணர்தல் சாத்தியமாகாது. இக்கருத்திற்கிசைய வடமொழியிலக்கணமொன்று தமிழில் எழுதலாயிற்று. உலகத்திலுள்ள இலக்கணங்கள் பலவற்றுள்ளும் தலைசிறந்துவிளங்குவதாகக் கணிக்கப்படும் பாணினீயத்தையே துணைக்கொண்டு வடமொழியுணர்ச்சியைச் சம்பாதித்துக்கொள்ள முயலுவோம்.

(தொடரும்)

ஸ்ரீ:

புரூரவசரிதை.

(உஅரு-ஆம் பக்கத்தொடர்ச்சி)

போதுகொய்படலம்.

இன்னதாயவிளவேனிலிறுப்ப
மன்னர்சூடுகழன்மன்னவர்மன்னன்
கன்னல்வேளமர்கடாவுமுனன்னோன்
றன்னுபாசனைதொடர்ந்திடலுற்றான். (1)

கவுண்மதப்புகர்முகச்சிறுகட்கா
ரிவுளிசுற்றவயில்வீரரிரைப்பத்
திவண்மணிச்சுடர்செறிந்து தயத்திற்
றவனைப்பொருவுதேர்புடைசார. (2)

மன்றநாறுகுழல்வல்லிமருங்குற்
குன்றமாமுலைக்குழைக்குழையூடு
சென்றுலாவியெதிர்செஞ்சிலைவேளை
வென்றவேலுடையவெள்ளநெருங்க. (3)

ஆசையாவையுமளந்தபுகழ்ச்சீர்
நேசமாதுபுயநீள்வரைமீதி
னேசிலாநடமியற்றுதல்போல
வீசுசாமரைவிரிந்துவிளங்க. (4)

சந்திரன்புவிதழைப்பவளித்த
மைந்தன்மைந்தனல்வழித்துணையாகிச்
சிந்தைகூரவயல்சென்றெனவெம்மை
யுந்துதண்கவிகையும்பாளப்ப. (5)

அயில்படைத்தவிழியங்கையொடொன்றக்
குயில்படைத்தமொழியின்னிசைகூட்ட
வுயிர்படைத்ததனியோவியமன்னார்
மயினடித்தெனமருங்கினடிப்ப. (6)

வெள்ளியால்வளையின்மெல்லியலன்னா
ரள்ளிவானமுதருத்துவதென்ன
வுள்ளிவீணையினரம்பினுகுத்த
தெள்ளுதேனிசைசெவிப்புலனுங்க. (7)

நாத்தழைக்கவிகணுவலர்நல்க
வேத்தெடுப்பவிசைவந்திகரென்போர்
வேத்தவைக்குழுமிடைந்திடமென்பூப்
பூத்தலர்ந்ததொருசோலைபுகுந்தான். (8)

வேறு.

பூவையுங்கிள்ளையும்புகழ்ந்துபோற்றின
மாவினங்குயில்கள்கட்டியம்வழங்கின
மேவுறுஞ்சிறையளியிசைமிழற்றின
கோவிளங்களிறனன்குறுகநோக்கியே. (9)

புன்னையும்வகுளமும்போதுதூவின
கன்னிகாரஞ்சுடர்கவினவேந்தின
துன்னுகேதகைபெருஞ்சோறுதாங்கின
மன்னவனெய்தினனெனுமகிழ்ச்சியால். (10)

புத்தமுதுட்பொதிவருக்கைபூங்கனி
மத்தகக்களிறனன்வரலுந்தூவுவ
வித்தகைபின்னவர்க்கிதல்வேண்டுமென்
றுத்தமக்குணத்தவருதவுந்தன்மைபோல். (11)

இலவினிற்சிறந்தளவிறந்தகாய்முதிர்ந்
துலர்தொறும்பஞ்சியாயுடைந்துபாறுவ
நலனுடையோர்வயினல்குறுநிதிப்
புலையர்தம்வாட்கையேபோலும்போலுமால். (12)

கலகலவெனச்சிலகாய்கலிப்புற
விலதுறுஞாழலினேர்திபூந்துணர்
குலவுபெண்குறுகிரைகொணரப்பார்ப்பின
மலருவாய்விரித்துநின்றரற்றல்போலுமே. (13)

கிளைகுலாம்வண்டினங்கெழுமியார்ப்புறத்
தளிகுலாங்கதம்பமொண்மலர்கடாங்குவ
களைகணுமொருவனைக்கண்டுகண்டுளம்
புளகமாய்மெய்ம்மயிர்பொடித்தல்போலுமே. (14)

அந்தரமீதுயர்ந்தகன்றசிற்றிலைச்
சிந்துவின்கூன்கனிசெறிந்துதூங்குவ
மைந்தரேமுதலிபவாழ்வின்வைகினுஞ்
சிந்தைவேறுற்றவர்செய்கைபோலுமே. (15)

கூந்தலங்கமுகிளங்குலையின்மீதுசெம்
மாந்தளிர்தோய்ந்துநின்றசைதல்வள்ளுகிர்ச்
சேர்ந்தகைபொருத்தியோர்திருவன்னாள்செழும்
பூந்துணர்க்குழல்சுகிர்விடுத்தல்போலுமால். (16)

இன்னனசோலையின்வளமைநோக்கியே
மன்னவன்மகிழ்தலுமற்றைமாந்தருங்
கன்னியர்குழாங்களுங்கமழும்பூந்துணர்ப்
பொன்னவிர்தாதுகுபோதுகொய்தனர். (17)

படியினுநீரினும்படர்ந்துசுற்றுபூங்
கொடியினுமுயரியமரத்தின்கோட்டினுங்
கடிமலர்யாவையுங்காமுற்றாரோ
துடியிடைமடந்தையர்வண்டின்றேற்றம்போல். (18)

பாசிலைச்சண்பகமலரைப்பற்றித்தன்
னாசியினுயிர்ப்பினன்மோப்பநாசியின்
வாசமும்வடிவமுமொத்தவாற்றினு
லாசையுற்றனண்மிகவொருத்தியாங்கரோ. (19)

அரசிளங்குமாரனுங்கொருவனன்பினன்
மரைமலர்முகிழினையொருத்திமார்புற
வுருவினைமறைத்துநின்றுந்தச்சிந்தையிற்
கருதினன்மதன்கணைச்செயலைக்காட்டவே. (20)

மங்கையர்குழாத்தொருமைந்தன்சந்தனக்
கொங்கைகளேக்கினன்கொங்கைகாளென
தங்கையிற்குழைபடவண்மினென்னவுஞ்
செங்கடைக்கண்ணொருமயிற்குச்சேர்ந்ததே. (21)

முருகவிழ்குழலினளொருத்திமுண்டக
விருமலரிருகரத்தேந்தியெய்தவாங்
கொருமகனையுருவுருவமிக்கவாங்
திருமகளாமெனச்செங்கைகூப்பினன், (22)

பங்கயஞ்சூதநீளசோகமுல்லைபண்
டங்கிசையளிமுரனீலந்தாங்கிய
செங்கையனொருவனைத்திருவன்னாரெழி
லங்கசன்றனுவிலனென்னவையுற்றார். (23)

வீழிவாய்க்கிளியன்னாளொருத்திமென்றுணர்த்
தாழ்மலர்க்கொம்பினைத்தடக்கைபற்றினு
ளேழைநீயென்னுடம்போதுகென்றுதன்
றோழிதோள்பற்றியதோற்றம்போலுமே. (24)

ஒசிந்தபூங்கொம்பினையொருவன்றீண்டலு
மசைந்தசைந்தவன்முகத்தடுத்துநீங்குவ
வசஞ்செயுமடந்தையர்வளைந்துநெஞ்சகங்
கசிந்திடமுத்தமீந்தவருங்காட்சிபோல். (25)

கோதைவேலொருவனங்கொருத்திகொங்கையு
மாதுளங்கனியையுமலர்க்கைபற்றினா
னேதுகொலெழினலமெனவினாதலும்
போதரிக்கண்ணினாள்பொருமிவிம்மினாள். (26)

இன்பமுந்துன்பமுமிகந்தவுள்ளத்தார்
மன்பதைநோக்கினோர்நோக்கின்வாட்கணாள்
பொன்போதிமுலைத்தலைமகிழின்போதுசேர்த்
தன்பினானொருவனீதழகிற்றென்றனன். (27)

தாங்கரும்பொறைவருந்தருணமாயதென்
றேங்குறுமிடையினாளொருத்தியேமுறப்
பாங்கனங்கொருவனன்பாருமச்சிறு
கோங்கரும்பெனவவள்கொங்கைநோக்கினான். (28)

புல்லிநீங்காதபுண்டரிகப்போதெனுஞ்
சொல்லிநீங்காமுலையொருத்திதூண்பொரு
வல்லிநீங்கியகளிறெனுமோர்மைந்தன்மேற்
கல்லிநீங்காதகட்காவிவீசினாள். (29)

வடமெலாம்புனைகெனவருமுலைக்குமார்
பிடமெலாங்கொடுத்தவண்முகத்தையேய்ந்திட
விடமெலாங்கொண்டவேன்மிளிருந்தாமரை
தடமெலாந்தேடினானொருபைந்தாரினான். (30)

பிணையமைத்தன்னகட்பெருங்கைக்குஞ்சரத்
துணைமருப்பெனுமுலைச்சும்மைதாங்கலா
ளொருத்தியமலரிருகைதாங்கினா
ளுணர்வுறுங்கருத்தவரேற்பதொப்பவே?. (31)

நைவளமொழியினாணிவனப்பினாள்
பொய்வளரிடையினாள்பூவின்மெல்லியாள்
மெய்வளங்கொடியனானொருவன்வேறிலாச்
செய்வளர்தாமரைச்செம்மல்தாங்கியே.? (32)

விண்டுறைமலர்பலகொய்துமீட்டுர்யாழ்ப்
பண்டுறைச்சொல்லியர்பற்றலாருயிர்
கொண்டுறைகிடந்தவாட்குமார்யாவரும்
வண்டுறைதடந்தொறுமருவியாடினார். (33)

போதுகொய்படலமுற்றும்.

(தொடரும்)

உதவிப்பத்திராதிபர்,

பெரியபுராணச் செய்யுட்டொகையாராய்ச்சி.

"செந்தமிழ்"ப் பதினேழாந்தொகுதியின் ௩௪௫-வது பக்கம் முதல் ௩௫௩-வது பக்கம் வரையில், திருத்தொண்டர்புராணமென்னும் பெரிய புராணத்தையாராய்ந்து, அதன்கண், தெய்வப்புலமைச் சேக்கிழாராற் பாடப்பட்ட செய்யுட்கள் 4253 இருக்கவேண்டியதிருக்க, திருமயிலைச் சுப்பராயஞானியார் அச்சுப்பிரதியில் 4299 செய்யுள்களும், இராமலிங்கம் பிள்ளை அச்சுப்பிரதியில் 4306 செய்யுள்களும், சென்னை பக்தஜன சபைப்பதிப்பிலும் நாவலர்பதிப்பிலும் 4286 செய்யுள்களும் இருக்கின்றனவென்றும், காண்டம் ஒன்றுக்கு இரண்டாயிரத்து நூற்றிருபத்தாறு செய்யுள்களும், சிகைச்செய்யுள் ஒன்றும் ஆக இரண்டுகாண்டத்துக்கும் 4253 செய்யுட்களே இருக்கவேண்டுமென்றும், அவற்றுள், முதற் காண்டத்துள் இருக்கவேண்டிய 2126 செய்யுள்கள் இவை யெனவும் காட்டினும்.

இதுபொழுது, இரண்டாங்காண்டத்துள் இருக்கவேண்டிய 2126 செய்யுள்களுக்கு உள்ளசெய்யுட்களைத் துணையென முதற்கண் குறிப்பாம்.

சிதம்பரம் ராமலிங்கம்பிள்ளையவர்கள் பதிப்புப்படி,

		பாடற்றொகை.
1.	திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்புராணம் முன் காண்டத்திற்சேர்ந்த செய்யுள் 215-ம் சிகைச்செய்யுள் ஒன்றும் போகப் பாக்கி	1041
2.	ஏயர்கோன்கலிக்காமநாயனார்புராணம்	410
3.	திருமூலநாயனார்புராணம்	28
4.	தண்டியடிகணாயனார்புராணம்	26
5.	மூர்க்கநாயனார்புராணம்	12
6.	சோமாசிமாறநாயனார்புராணம்	5+1

7.	சாக்கியநாயனார்புராணம்	18
8.	சிறப்புலிநாயனார்புராணம்	6
9.	சிறுத்தொண்டநாயனார்புராணம்	88
10.	சேரமான்பெருமாணாயனார் (கழறிற்றறிவார்) புராணம்	174
11.	கணநாதநாயனார்புராணம்	7
12.	கூற்றுவநாயனார்புராணம்	8+1
13.	பொய்யடிமையில்லாதபுலவர்	3
14.	புகழ்ச்சோழநாயனார்	41
15.	நரசிங்கமுனையரையர்	9
16.	அதிபத்தநாயனார்	20
17.	கலிக்கம்பநாயனார்	10
18.	கலியநாயனார்	16
19.	சத்திநாயனார்	7
20.	ஐயடிகள்காடவர்கோன்	9
21.	கணம்புல்லநாயனார்	9
22.	காரிநாயனார்	5
23.	நெடுமாறநாயனார்	10
24.	வாயிலார்நாயனார்	10
25.	முனையடுவார்நாயனார்	6+1
26.	கழற்சிங்கநாயனார்	13
27.	இடங்கழிநாயனார்	11
28.	செருத்துணைநாயனார்	7
29.	புகழ்த்துணைநாயனார்	7
30.	கோட்புலிநாயனார்	12+1
31.	பத்தராய்ப்பணிவார்	8
32.	பரமனையேபாடுவார்	2
33.	சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார்	1

34.	திருவாரூர்ப்பிறந்தார்	2
35.	முப்போதுந்திருமேனிதீண்டுவார்	3
36.	முழுநீறுபூசியமுனிவர்	6
37.	அப்பாலுமடிச்சார்ந்தார்	1+1
38.	பூசலார்நாயனர்	18
39.	மங்கையர்க்கரசியார்	3
40.	நேசநாயனர்	5
41.	கோச்செங்கட்சோழநாயனர்	18
42.	திருநீலகண்டயாழ்ப்பாணர்	12
43.	சடையநாயனர்	1
44.	இசைஞானியார்	1
45.	வெள்ளானைச்சருக்கம்	53
	ஆக	2162+5

இனி, ஒவ்வொரு சருக்கத்தினீற்றிலும் பாடப்பட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகளது துதியான ஐந்துபாக்களையும் நீக்க இரண்டாங்காண்டத்துள், இரண்டாயிரத்து நூற்றறுபத்திரண்டுசெய்யுள்கள் காணப்படும். இதில் இக்காண்டத்திற் பாகுபாட்டின்படி இருக்கவேண்டியசெய்யுள் 2126 போக அதிகமாக 36 செய்யுள்கள் காணப்படுகின்றன. ஆகவே முப்பத்தாறுசெய்யுள்கள் இவ்விரண்டாங்காண்டத்தில் இடைச்செருகலாய் ஏறியிருக்கின்றனவென்று ஏற்படுகிறது. இந்த முப்பத்தாறு இடைச்செருகற்செய்யுட்களும் இவையென்று கண்டறியவேண்டியது நமது கடமையாகும். இனி நம் கடமையை மேற்கொண்டு நமக்குத் தெரிந்தவரை ஆராய்வாம்.

I. திருமயிலைச் சுப்பராயஞானியார் அச்சுப்பிரதியில் ஏயர்கோன் கலிக்காமநாயனர்புராணத்தில்,

"மானு மயனு முணர்வரியார் மகிழும் பதிகள் பலவணங்கி
ஞால நிகழ்கோட் புலியார்தந் நாட்டி யத்தான் குடிநண்ண

ஏனும் வகையா லலங்கரித்தங் கவரு மெதிர்கொண் டினிதிறைஞ்சிக்
கோல மணிமா ளிகையின்க ணார்வம் பெருகக் கொடுபுக்கார்." (33)

"தூய மணிப்பொற் றவிசிலெழுந் தருளி யிருக்கத் தூநீராற்
சேய மலர்ச்சே வடிவிளக்கித் தெளித்துக் கொண்ட செழும்புனலான்
மேய சுடர்மா ளிகையெங்கும் விளங்க வீசி யுளங்களிப்ப
ஏய சிறப்பி லர்ச்சனைக ளெல்லா மியல்பின் முறைபுரிவார்." (34)

என்று காணப்படுகிறது. சிதம்பரம் இராமலிங்கம்பிள்ளை அச்சுப்பிரதியில் இவ் விரண்டுபாக்களுக்கு மிடையில்,

"ஆண்ட நம்பி யுடன்வந்த வன்ப ரோடும் புறத்தணைந்து
நீண்ட மதிட்கோ புரங்கடந்து நிறைமா ளிகைவீ தியிற்போந்து
பூண்ட காதன் மிகுதியினாற் புனைமங் கலதூ ரியமொலிப்ப
வீண்டு புகழ்க்கோட் புலியார்மா ளிகையை யெய்தி யுள்ளணைந்தார்"

என்ற செய்புளொன்று காணப்படுகிறது. இச்செய்யுளை அச்சிட்ட பிள்ளையவர்கள், "ஞானியாரச்சிட்ட பெரியபுராண ஏயர்கோன் கலிக்காம நாயனார்புராணத்தில் 33—வதுபாட்டின்கீழ் 'ஆண்டநம்பியுடன்வந்த' என்கிறபாட்டு விட்டிருக்கிறபடியால் அதை இப்புராணத்திற் சேர்த்திருக்கிறோ"மென்று எழுதியுள்ளார்கள். இப்பாட்டு அவ்விடமிருத்தல் நியமந்தானா என்று ஆராயப்புகின், கோட்புலியார்தம்நாட்டியத்தான் குடிநண்ண அவரும் (கோட்புலியாரும்) ஏனும்வகையா னலங்கரித்து, எதிர்கொண்டு, இறைஞ்சிக் கோலமணிமாளிகையின்கண் ஆர்வம்பெருகக் கொடுபுக்காரன்றே? கொடுபுக்கவர் சுந்தரரைத் தூயமணிப்பொற்றவிசில் எழுந்தருளியிருக்கச்செய்து தூநீராற் சேயமலர்ச்சேவடி விளக்கிப் பண்பின் மற்றவை செய்தார் என்பது சேக்கிழார்சுவாமிகள் கருத்தாகும். 'ஆண்டநம்பி' என்றபாட்டையும் உடன்கொண்டு பொருள்கொள்ளப் புகுங்கால், செம்பொருள் ஒழுகிசையினின்றும் வழுவுதல் காண்க. அன்றியும், மாலுமயனுமுணர்வரியார் பதிகள் பல வணங்கிய நாவலூரார் நாட்டியத்தான்குடி நண்ணக் கோட்புலியார் கொடுபுக்கார் என்று கூறியபின்னர்க் கொடுபுக்கவர் செய்தியைக்கூறுதலமையுமேயொழிய அதனைவிட்டு நம்பியாரூர்செய்தியை அவ்விடத்து இடைமடுத்தல் வேண்டாததொன்றாம். மேலும், இச்செய்புளின்பொருளையும் போக்கையுங் கவனிக்கும்

போது இது முன்பின்செய்யுள்களோடு பொருந்துமாறில்லாதிருப்பதுங் காண்க. இன்னும் 33வது செய்யுளிற் கொடுபுக்கார் என்று முடிந்திருக்க இவ்விடைமடுத்த செய்யுளில் நம்பியாரூரர் கோட்புலியார்மாளிகை யெய்தினுர் எனக் காணப்படுகிறது. இதில் எய்தினுர் என்னும் வினை நம்பியாரூரர் தாமே கோட்புலியார்மனைக்கு வலியச்சென்ருரென்பதைக் குறிக்கும். ஒருவரான் அழைக்கப்பட்டுச் சென்றவர் வலியச் செல்லக் காரணமில்லை. ஆகையால் இது இடைச்செருகலென்றே கொள்ளவேண்டும். இவ்வொருபாட்டையும் நீக்க மிகுதியாவது 35 செய்யுட்களே.

II. திருஞானசம்பந்தசுவாமிகள்புராணத்திலே சுவாமிகள் புரட்டுச்சமணரை வாதில் வெல்லுங்கால், திருவேட்டிலே திருப்பாசுரத்தைப் பலருமுணர்ந்துய்யப் பகர்ந்துவரைந்து யாற்றில் திருக்கையால் நீட்டியிட்டார் என்றுகூறிய 821 ஆம் செய்யுளுக்குப்பின், கதை தொடர்பாயிருக்கவேண்டுமாயின் இட்டவேடு எடுபடவேண்டியதேயன்றி நடுவில் வேறுசெய்தியொன்று மிருக்கக் காரணமில்லை. அப்படியில்லாமல் இப்பொழுது புராணங்களிலே 821-ஆம் செய்யுளுக்குப்பின் ஏட்டிலெழுதியிட்ட திருப்பாசுரத்திற்குப் பொருள்கூறுவதாகக்கொண்டு "அந்தணர் தேவரானினங்கள் வாழ்க" என்பது முதல், "நெறியே சிறிது யானறி நீர்மை கும்பிட்டேனன்பால்" என்பதுவரை (822—845) 24 செய்யுள்களைக் கணக்கிட்டுக் கதைத்தொடர்ச்சியினைக்கெடுத்து வேறுவிடயங்களைப்புகுத்தி மறுபடியும் "திருவுடைப்பிள்ளையார்தந் திருக்கையாலிட்ட வேடு" என்று தொடர்ந்தவிடயம் ஆரம்பிக்கப்படுகிறது. இதனுனே இவ்விடைமடுக்கப்பட்ட செய்யுள்களையும் சேர்த்து எண்ணவொண்ணுதென்பது விளங்கும். ஆகவே அது சம்பந்தமான இருபத்துநான்குசெய்யுள்களும் கணக்கிலிருந்து நீக்கப்படல்வேண்டும். இவ்விருபத்து நான்குசெய்யுளுங் குறையுமானுல், பதினெருசெய்யுள்களே அதிகமாகக் காணப்படும். இந்தப் பதினெருசெய்யுள்களும் இவைகளாகத்தானிருக்க வேண்டுமென அவைகட்குற்ற காரணங்களோடு கீழை குறிக்கப்பட்டுள்ளன. அறிஞர் ஏற்றபெற்றி கொள்வார்களாக.

III. இன்னும், திருஞானசம்பந்தசுவாமிகள்புராணத்தில்,

"பரவுதிருப் பதிகவிசை பாடிநீடும்
பரன்கருணைத் திருவருளின் பரிசுபோற்றி
விரவுமலர்க் கண்பனிப்பக் கைகள்கூப்பி
வீழ்ந்தெழுந்து புறம்போந்து வேதவாய்மைச்
சிரபுரத்துப் பிள்ளையார் செல்லும்போது
திருநீல கண்டயாழ்ப் பாணர்பின்னே
வரவவரை வளம்பெருகு மனையிற்போக
வருள்செய்து தந்திருமா ளிகையின்வந்தார்."

என்ற 261-வது செய்யுளுக்குப்பின்,

"மறையவர்க ளடிபோற்றத் தந்தையாரு
மருங்கணைய மாளிகையி லணையும்போதி
னிறைகுடமு மணிவிளக்கு முதலாயுள்ள
நீடுமறைக் குலமகளிர் நெருங்கியேந்த
விறைவர்திரு நீற்றுக்காப் பேந்திமுன்சென்
றின்றதா யார்சாத்தி யிறைஞ்சியேத்த
முறைமையவர்க் கருள்செய்து மடத்திற்புக்கார்*
முதல்வர்பான் மணிமுத்தின் சிவிகைபெற்றார்."

என்று ஒருசெய்யுள் காணப்படுகிறது. இதற்கடுத்து, "செல்வநெடு மாளிகையி லமர்ந்து நாளுந் திருத்தோணி மிசையாரைச் சென்று தாழ்ந்து;..தாங்கினர் சுரர்கள்போற்ற" என்ற செய்யுள் காணப்படுகிறது.

திருநீலகண்டயாழ்ப்பாணரை முன்னே அவர்மனைக்குப் போக விட்டுப் பின்னே தமதில்லத்தில்வந்தார் என்று கூறியவர், மேல் வந்தவர் மாளிகையிலமர்ந்து செய்த செயலைக் கூறவேண்டுமேயன்றி, இடையே "மறையவர்கள் அடிபோற்ற..இறைவர் திரு நீற்றுக்காப்பேந்திமுன்சென்றின்றதாயார் சாத்தி யிறைஞ்சியேத்த முறைமையவர்க்கருள்செய்து மடத்திலே புகுந்தா"ரென்றது மிகைபடக் கூறியதாவதோடு, இல்லதொருவழக்கினையுங் காட்டுகின்றதன்றோ?

---

*'பரவுதிருப்பதிகம்' என்னுமுதற்செய்யுளில் 'திருமாளிகையின்வந்தார்' என்றவர், இச்செய்யுளில் 'மடத்திற்புக்கார்' என்றதும் பொருந்தாததாயிருக் கிறது. உதவிப்பத்திராதிபர்.

தத்துபரிவளவன்றன் செங்கோலோச்சுமமைச்சரிற் றலைவரான தெய்வப்புலமைச் சேக்கிழார்சுவாமிகள், செய்யுணயமாத்திரமின்றி ஒழுகிசைச்செப்பலின்பம் பயக்கக்கூடியதாகவே நூன்முழுவதும் பாடியிருத்தலை ஊன்றிநோக்குவார்க்கு இவ்விடைச்செருகல் புலனும். அன்றியும், வந்தாரென்று வினைமுடிந்தபிறகு புக்காரென மற்றொருவினை கொடுத்து முடித்தல் சுவாமிகள் வழக்காகக்காணப்படவில்லை. அடுத்த செய்யுளில் வந்தவர் 'அமர்ந்து' என்று காணப்படுதலே இதற்குச்சான்றும். ஆகையால் இது, இடைச்செருகலென்றே துணியவேண்டியிருக்கிறது.

IV. மேலும், காம்பிணைவென்ற மென்றோளியாரற் பொற்கிண்ணத்தினின்று அமிழ்தூட்டப்பெற்ற எந்தையாம் திருஞானசம்பந்தப்பெருமான், பூக்கமழும்பணைசூழ்ந்த புகலியின் மீண்டும்புகுந்து, தேக்கியமசமறைவெள்ளத்திருத்தோணிவீற்றிருந்தாரை மொழிமாற்று, மாலைமாற்று, வழிமொழி, மடக்கு, சந்தவியமகம், ஏகபாதம், இருக்குக்குறள், எழுகூற்றிருக்கை, ஈரடிவைப்பு, நாலடிமேல்வைப்பு, மேன்மைநடையின் முடுகுமாசகம், சக்கரம் ஆதிய விகற்பச்செய்யுட்களாற் செந்தமிழ்மாலை பாடி, யாழ்ப்பெரும்பாணனூர்தாமும், மன்னுமிசைவடிவானமதங்க சூளாமணியாரும் அம்மாலைகளைப் பன்னியவேழிசைபற்றிப் பாடக்கேட்டினிதமர்ந்தருளியிருக்குங்காலத்து, அருந்தமிழ்நாட்டிலுள்ள திங்கட்சடையார்தந் திருப்பதியாவையுங் கும்பிடுவான்கருதி,

"..

நீண்டசடை யாரடிக்கீழ்ப் பணிவுற்று நீ டருள்பெற்றே

யீண்டுபுகழ்த் தாதையார்பின் னெய்திடயாழ்ப் பாணரோடுங்

காண்டகு காழிதொழுது காதலினாற் புறம்போந்தார்".

என 281-ஆம் செய்யுளும், இதனுடன் கதைத்தொடர்புடையதாக,

"திருமறைச் சண்பைபாளி சிவனூர்திருக் கண்ணூர்கோயில்

பெருவிருப்பா லணைந்தேத்திப் பிஞ்ஞகர் கோயில்பிறவு

முருகியவன் பாலிறைஞ்சி யுயர்தமிழ் மாலைகொண்டேத்தி

வருபுனற் பொன்னிவடபாற் குடதிசை நோக்கிவருவார்"

என இருநூற்றெண்பத்தைந்தாஞ் செய்புளும் காணப்படுகின்றன. காழியினின்றும் வெளிப்போந்த சம்பந்தப்பெருமான் திருக்கண்ணார் கோயில் முதலான தலங்களைத் தரிசித்துக்கொண்டு, பொன்னிநதியான காவிரியின்வடபால் மேற்குநோக்கிச் சென்றாரென்பது இவற்றின் பொருளாம். இவ்வாறு சென்றதிலும் செல்வதிலும் விபப்பாவது வெறுப்பாவது காணப்படுதலில்லை. ஆனால், புறம்போந்தார் என முற்றுவினையாகக்கூறிய 281-ஆம் செய்புளுக்கும் அதனுடன் தொடர்புடையதாக மேலேகாட்டிய 285-ஆம் செய்புளுக்கு மிடையில்,

"அத்திரு மூதூரினுள்ள ரமர்ந்துடன் போதுவார் போத
மெய்த்தவ ரந்தணர் நீங்கா விடைகொண்டு மீள்வார்கண் மீள
முத்தின் சிவிகைமேற் கொண்டு மொய்யொளித் தாம நிரைத்த
நித்தில வெண்குடை மீது நிறைமதி போல நிழற்ற" (282)

"சின்னந் தனிக்காளந் தாரை சிரபுரத் தாண்டகை வந்தா
ரென்னுந் தகைமை விளங்க வேற்ற திருப்பெயர் சாற்ற
முன்னெம் மருங்கு நிறைந்த முரசுடைப் பல்லிய மார்ப்ப
மன்னுந் திருத்தொண்ட ரானோர் வந்தெதிர் கொண்டு வணங்க" (283)

"சங்கநா தக்க ளொலிப்பத் தழங்குபொற் கோடு முழங்க
மங்கல வாழ்த்துரை யெங்கும் மல்க மறைமுன் னியம்பத்
திங்களும் பாம்பு மணிந்தார் திருப்பதி யெங்குமுன் சென்று
பொங்கிய காதலிற் போற்றப் புகலிக் கவுணியர் போந்தார்." (284)

என்று மூன்றுசெய்புள்கள் காணப்படுகின்றன. ஒருமுறை 'போந்தார்' என்று கூறியவர் இரண்டாமுறையும் போந்தாரென்றல் மிகையன்றோ? 'ஆண்டகையாரு' மென்றெடுத்த சேக்கிழார்நாயனார் ஒருபடி ஓரிடத்து ஒருவினையை முற்றுக்கியபின் மறுபடி அதேயிடத்து அதே வினையை அதே பொருளில் எடுத்தாண்டமை காண்கிலம். அன்றியும், 'ஆண்டகை' யென்ற ஒருசொல்லே எல்லாப் பெருமைகளையுமுடையதாயிருக்க மீண்டும் 'புகலிக்கவுணியர்' என்று கூறத்துணியார். மேலும், சேக்கிழார் கவுணியர்குலமுதலைக்கூறுமிடத்தெல்லாம் சுருங்கச்சொல்லி விளங்கவைத்தனரேயன்றி இத்துணைப்பெருமையோடு கூறியதாகப்புலப்படவில்லை. ஆகையால் இடையில்வந்த மூன்றுசெய்புள்களும் இடைச்

செருகலாயிருத்தல் கூடுமென நம்பவேண்டியதாயிருக்கிறது. பெரியார் ஆராய்ந்து தம் அபிப்பிராயத்தை வெளியிடுதல் உத்தமமாகும்.

V. திருஞானசம்பந்தப்பெருமான், கருகாவூர், அவளிவணல்லூர் சீர்ப்பரிதிநியமம் முதலிய பதிகளைத் தரிசனஞ்செய்துகொண்டு திருவலஞ்சுழியடைந்து திருவலஞ்சுழியுடையாரைத்தொழுது, "என்ன புண்ணியஞ் செய்தனைநெஞ்சமே" யென்னும் வினவுந்திருப்பதிகம்பாடிப் பாவிப் பழையாறை யெய்துதற்கு நண்புடைய அடியார்களுடன் நடந்து ஆறைமேற்றளி சென்றெய்தினர் என்ற விருத்தாந்தத்தை அடியில்வரும் 379, 380, 381, 382, 389-ஆம் செய்யுள்கள் விளக்குகின்றன.

"மதிபுனைந்தவர் வலஞ்சுழி மருவுமா தவத்து
முதிருமன்பர்கண் முத்தமிழ் விரகர்த முன்வங்
தெதிர்கொள்போழ்தினி லிழிந்தவ ரெதிர்செல மதியைக்
கதிர்செய் வெண்முகிற் குழாம்புடை சூழ்ந்தெனக் கலந்தார்" ()

"கலந்தவன்பர்க டொழுதெழக் கவுணியர் தலைவ
ரலர்ந்தசெங்கம லக்கரங் குவித்துட னணைவார்
வலஞ்சுழிப்பெரு மான்மகிழ் கோயில்வந் தெய்திப்
பொலங்கொள்நீள்சுடர்க் கோபுர மிறைஞ்சியுள் புக்கார்" (380)

"மருவலார்புர முனிந்தவர் திருமுன்றில் வலங்கொண்
டுருகுமன்புட னுச்சிமே லஞ்சலி யினராய்த்
திருவலஞ்சுழி யுடையவர் சேவடித் தலத்திற்
பெருகுமாதர வுடன்பணிந் தெழுந்தனர் பெரியோர்." (381)

"ஞானபோனகர் நம்பர்முன் றொழுதெழு விருப்பா
லானகாதலி லங்கண ரவர்தமை வினவு
மூனமில்லிசை யுடன்விளங் கியதிருப்பதிகம்
பானலார்மணி கண்டரைப் பாடினர் பாவி" (382)

"கண்ணவரும் பிள்ளையார் சடாமகுடர் வலஞ்சுழியை
யெண்பெருகத் தொழுதேத்திப் பழையாறை யெய்துதற்கு
நண்புடைய வடியார்க ளுடன்போத நடந்தருளி
விண்பொருநீள் மதிளாறை மேற்றளிசென் றெய்தினர்" (389)

இங்குக் கூறியபடி 382-ஆம் செய்யுளுக்குப்பின், சண்பைவரும் பிள்ளையார் என்ற முதற்குறிப்புடைய 389-ஆம் செய்யுள் தொடர்புடையதாயிருக்கவும், இச்செய்தியூடே 383 முதல் 388-ம் செய்யுள்வரை ஆறு செய்யுளால் திருவலஞ்சுழிவந்த பாலருவாயர் முதுவேனிலால் மிக்க துன்புற்றார் என ஒருசெய்தி கூறப்பட்டிருக்கிறது. அது வருமாறு:—

“புலன்கொளின்றமிழ் போற்றினர் புறத்தினி லணைந்தே
யிலங்குசீர்ப்பொன்னி சூழ்திருப் பதியினி லிருந்து
நலங்கொள்காதலி னதர்தா றுடொறும் பரவி
வலஞ்சுழிப்பெரு மான்றொண்டர் தம்மொடு மகிழ்ந்தார்” (383)

“மகிழ்ந்ததன்றலை வாழுமந் நாளிடை வானிற்
றிகழ்ந்தஞாயிறு துணைப்புண ரோரையுட் சேர்ந்து
நிகழ்ந்ததன்மையி னிலவுமேழ் கடனீர்மை குன்ற
வெகுண்டுவெங்கதிர் பரப்பலின் முதிர்ந்தது வேனில்” (384)

“தண்புனற்குளிர் கானறுஞ் சந்தனத் தேய்வை
பண்புரிடிய வாசமென் மலர்பொதி பனிநீர்
நண்புடைத்துணை நகைமணி முத்தணி நாளு
முண்பமாதுரி யச்சுவை யுலகுளோர் விரும்ப” (385)

“அறன்மலியுங் கான்யாற்றி னீர்நசையா லணையுமான்
பெறலரிய புனலென்று பேய்த்தேரின் பின்றொடரு
முறையுணவு கொள்ளும்புட் டேம்பவய விரைதேரும்
பறவைசிறை விரித்தொடுங்கப் பனிப்புறத்து வதியுமால்” ()

“நீணிலைமா ளிகைமேலு நிலாமுன்றின் மருங்கினிலு
வாணிழனீள் சோலையிலு மலர்வாவிக் கரைமாடும்
பூணிலவு முத்தணிந்த பூங்குழலார் முலைத்தடத்துங்
காணுமகிழ்ச் சியின்மலர்ந்து மாந்தர்கலந் துறைவரால்.” (387)

“மயிலொடுங்க வண்டாட மலர்க்கமல முகைவிரியக்
குயிலொடுங்காச் சோலையின்மென் றளிர்கோதிக் கூவியெழத்
துயிலொடுங்கா வுயிரனைத்துந் துயில்பயிலச் சுடர்வானில்
வெயிலொடுங்கா வெம்மைதரும் வேனில்விரி தருநாளில்” (388)

“சண்பைவரு...............ஆறைமேற்றளிசென்றெய்தினர்” (389)

இவ்வாறு வேனிற்காலத்தைவருணிக்க இடமொன்றும் பாட்டிற் காணப்படவில்லையே? இவ்வருணனைக்கு இடந்தந்ததுதானென்னே? தேவாரப்பதிகங்களில் ஏதாவது ஆதாரமுண்டாவென்று ஆராய்ந்தும் ஒன்றும்தோன்றவில்லை*. வருணனையிற்கண்டவாக்கினையூன்றியாராய்ந்து பார்த்து வாக்கின்நயத்தைக்கொண்டு ஊகித்தறியலாமாயினும் இந்நூலிற் றஞ்செய்யுளை இடைமடுத்த வெள்ளியம்பலவாணத்தம்பிரானும் வடமொழி தென்மொழிகளில் வல்லராய், முத்திநிச்சயம் என்னும் 17 பாக்களடங்கிய ஒரு சிறு சித்தாந்தநூலுக்குப் பெரும்பேருரைகண்ட புலவராதலால் அவர் இடைமடுத்த பாக்களை யறிந்து வெளியிடுதல் அசாத்திய மான காரியமாகும்.

VI. பூவலர் பொழில்சூழ் சண்பைப்புரவலர் பறிதலையமணரை யோட்டுவான், வெள்ளிமன்றுளாடி அமரு மதுரைமாநகர்சென்று திருமடத்திற்றங்கியபோது அமண்கொடியோர் திருமடத்திற் றீயிட்டதும் அத்தீ பாண்டியனைப்பற்றும்படி எம்பிரான் வெள்ளிமன்றுளாரைவேண்ட அவ்வாறே அத்தீ பாண்டியனைப்பற்றியதும் யாவரும் அறிந்ததே. திருட்டு அமண்குண்டர்செய் மாயத்தால், தென்னவனைப்பற்றிய வெப்புநோய் தீராமைகண்டு, சுமந்திரனும் மற்றுமுள்ளோரும் அருமறைவாழ் பூம்புகலியண்ணலார்வரின் வெப்புநோய்தீர்தல் திண்ணமென்ற அளவில் வேந்தன் அடிகளை அழைத்துவரக் கட்டளையிட்டனன். பாலறுவாயரும் அரசனவைபுகுதுமென வெளிப்போந்து, "சேவுயர்கொடியினார்தந் திருவுள்ளமறிவே" னென்று மடத்தினின்றும்,

"...
மெய்யணி நீற்றுத்தொண்டர் வெள்ளமுந் தாமும்போந்து
கைபிணை தலையின்மீது குவியக்கண் மலர்ச்சிகாட்டச்
செய்யவார் சடையார்மன்னுந் திருவாலவாயுட் புக்கு." (737)

---

* ௩௩௨-ம் செய்யுளால் இவ்வேனிற்காலவருணனை இடைச்செருகலென்றென்று தோன்றுகிறது. திருச்சத்திமுற்றத்திலிருந்து நாயனார் திருப்பட்டீச்சுரஞ்செல்லுங்கால் வேனிலால் உண்டாகிய வெப்பத்தைத்தணிக்கும்படி நாயனார்க்குப் பட்டீச்சுரமுடையார் முத்துப்பந்தரளித்தனரென்று கூறியிருக்கின்றனரன்றோ? முன்பு வேனிற்காலத்தைப்பற்றிக்கூறிவிட்டால் இங்கு வேனிலால்வரும்வெப்பத்தைத்தணிக்க முத்துப்பந்தரளித்தனரென்பது எங்ஙனம் பொருந்தும். உதவிப்பத்திராதிபர்.

"கானிடை யாடுவாரைக் காட்டுமா வுரிமுன்பாடித்
தேனலர் கொன்றையார்தந் திருவுள நோக்கிப்பின்னு
மூனமில் வேதவேள்வி யென்றெடுத் துரையின்மாலை
மானமில் லமணர்தம்மை வாதில்வென் றழிக்கப்பாடி." (379)

"ஆலமே யமுதமாக வுண்டுவா னவர்க்களித்துக்
காலனை மார்க்கண்டற்காய்க் காய்ந்தனை யடியேற்கின்று
ஞாலநின் புகழேயாக வேண்டுநான் மறைகளேத்துஞ்
சீலமே யாலவாயிற் சிவபெரு மானேயென்றார். (380)

இவற்றில், கதைத்தொடர்பு விடுபடவில்லை. மேலேகாட்டிய 737, 739, 740-ஆம் பாட்டுக்கள் தொடர்புடையனவாயிருந்தும் இடையே 738-வதுசெய்யுளாக,

"நோக்கிட விதியிலாரை நோக்கியான் வாதுசெய்யத்
தீக்கனன் மேனியானே திருவுள மேயென்றெண்ணில்
பாக்கியப் பயனுள்ள பாலறாவாயர் மெய்ம்மை
நோக்கிவண் டமிழ்செய்மாலைப் பதிகந்தா னுவலலுற்றார்." (738)

என்றசெய்யுள் காணப்படுகிறது. இது, பொருளையும் இடத்தையும் நோக்க மிகையென்றே தோன்றுகிறது.

மேலேகாட்டிய III, IV, V, VI, பத்திகளால், மிகையான 11 பாட்டுக்களும் குறிக்கப்பட்டன. இப்பாக்கள் உரியவிடத்தேதான் பதிக்கப்பட்டிருக்கின்றனவென வாதித்தலுங் கூடும். அங்ஙனமாயின் அவற்றின் வன்மைமென்மைகளைத் தெரிவித்துக் கண்டிப்பதோடுநில்லாது வேறு எவ்வெச்செய்யுட்கள் இடைச்செருகலா யிருத்தலியலுமென்பதனை அறிஞர்கள் தெரிவிப்பார்களாக. I, II. பத்திகளிற் குறித்த இருபத்தைந்துசெய்யுட்களும் கணக்கினின்று நீக்கப்படல் வேண்டுமென்றே கொள்ளவேண்டும்.

இலக்கணவிளக்கபரம்பரை.

திருவாரூர். சோமசுந்தரதேசிகன்.

ஸம்ஸ்க்ருத வ்ருத்தமஞ்ஜரீ.

(யாப்பியல்)

ஸம்ஸ்க்ருத நூல்கள் கத்யம் (prose) எனவும், பத்யம் (poetry) எனவும் இருவகையாயமைந்துள்ளன.

பிங்கள சந்தஸ் சாஸ்த்ரம் ஸம்ஸ்கிருதத்தில் ஆதி யாப்பியல் நூல்.

பத்யம். { I வ்ருத்தம் / II ஜாதி. } இவை, 4 அடிகள் (பாதங்கள்) உள்ளவை.

வ்ருத்தம் என்பது அக்ஷர (அசை) க்கணக்காலமைந்துள்ளது.

மூன்றுவகை வ்ருத்தங்கள்:—

1. ஸமவ்ருத்தம்—4 அடியும் ஒரேமாதிரியாயுள்ளது.

2. அர்த்தஸமவ்ருத்தம்—முதலாவது மூன்றாவது அடிகள் ஒரே மாதிரியாகவும், 2, 4 அடிகள் ஒரேமாதிரியாகவும் அமைந்துள்ளது.

3. விஷமவ்ருத்தம்—நான்கு அடிகளும் வெவ்வேறாயமைந்துள்ளது.

II ஜாதி என்பது மாத்திரைக்கணக்காலமைந்துள்ளது.

(1) குறில்கள் யாவும் ஒருமாத்திரையளவுள்ளவை [க, டு, ஒ]

(2) நெடில்கள் ,, இரண்டுமாத்திரையளவுள்ளவை.

[ஆ கூ சீ டே.]

(3) குறிலுக்குப்பின் ஒற்று அல்லது விஸர்க்கம் வருமாயின் அக்குறில் இரண்டுமாத்திரையளவுள்ளதாம்.

[கம், ஐ:]

(4) பாதக்கடைசிக் குறிலும் இரண்டுமாத்திரையளவுள்ளதாம்.

அக்ஷரம் (அசை=syllable)

உயிர், உயிர்மெய் யாவும் ஓரோர் அக்ஷரமாகும்.

ஒற்றுக்குத் தனிமாத்திரையளவாவது அக்ஷர அளவாவது கிடையாது.

யதி (caesura)

செய்யுளில் ஒவ்வொருபாதத்தையும் வாசிக்கையில், நடுவே நிறுத்தி வாசிக்கவேண்டிய இடங்கள்.

கணம் என்பது 3 அக்ஷரமடங்கிய இசை.

ஆதி மத்யா வஸா நேஷு
ய ர தா யாந்தி லாகவம்!
ப ஜ ஸா கௌரவம் யாந்தி
ம நௌ து குரு லாகவம்!!

கணவிவரம்—

கணம்	விவரம்
ய கணம்	=ந ஒ ஒ
ர ,,	=ஒ ந ஒ
த ,,	=ஒ ஒ ந
ப ,,	=ஒ ந ந
ஜ ,,	=ந ஒ ந
ஸ ,,	=ந ந ஒ
ம ,,	=ஒ ஒ ஒ
ந ,,	=ந ந ந
க (குரு)	=ஒ (தனிநெடில்)
ல (லகு)	=ந (தனிக்குறில்)

முறையே ய கணம், ர கணம் என்று கூறவேண்டும்.

ந குறிலையும் ஒ நெடிலையும் குறிக்கும்.

ப=ഭ, Bha

க=ഗ, Ga

வஸமவ்ருத்தப்ரகரணம்.

4. ப்ரதிஷ்டா (=கன்யா)

பாதம் ஒன்றுக்கு 4 அசை

க. ம. (ஒ ஒ ஒ ஒ)

5. ஸுப்ரதிஷ்டா (=பங்க்தி)

அசை 5

ப, க. க (ஶ ன ன ஶ ஶ)

6. காயத்ரீ (அசை 6.)

1. தனுமத்யா=த ய (ஶ ஶ ன ன ஶ ஶ)
2. வித்யுல்லேகா=ம ம (ஶ ஶ ஶ ஶ ஶ ஶ)

[முத்தி நெறி யறியாத(ர)]

3. ஶஶிவதனா=ந. ய (னனன ன ஶ ஶ)
4. ஸோமராஜீ=ய. ய (ன ஶ ஶ ன ஶ ஶ)

ஷ யதி 2+4

7. உஷ்ணிக் (7 அசை).

1. குமாரலளிதா=ஜ ஸ க (3+4)

=ன ஶ ன ந ன ஶ ஶ

2. மத்லேகா =ம ஸ க (3+4)

=ஶ ஶ ஶ ந ன ஶ ஶ

3. மதுமதீ =ந. ந. க (5+2)

=ந ந ந ந ந ந ஶ

[ஆதிமூலமேன்—றோதும் வேளையில்]

வானவர்களே தானவர்களே!

மானினிதனை எங்கு காணுவேன்.

8. அநுஷ்டுப் (8 அசை).

1. அநுஷ்டுப் (=ஸ்லோகம்).

நாலு அடிகளிலும் 6-ம் அசை நெடில்

	,,	5	,,	குறில்
2.4	,,	7	,,	,,
1.3	,,	7	,,	நெடில்

[இது, இதிஹாஸ புராணங்களிலும் மற்றநூல்களிலும் விசேஷமாயுள்ளது]

2. கஜகதி=ந ப ல க (4+4)
=நநந ஞநந நஞ

3. ப்ரமாணிகா=ஜ ர ல க (4+4)
=நஞந ஞநஞ நஞ

4. மாணவகம்=ப த ல க (4+4)
=ஞநந ஞஞந நஞ

5. வித்யுன்மாலா=ம ம க க (4+4)
=ஞஞஞ ஞஞஞ ஞஞ

6. ஸமாநிகா=ர ஜ க ல (4+4)
=ஞனஞ னஞன ஞன

9. ப்ருஹதீ. (9 அசை)

1. புஜகஶிஶுப்ருதா=நநம (7+2)
=நநந நநந ஞஞஞ

2. புஜங்கஸங்கதா =ஸ ஜ ர (3+6)
நநஞ நஞந ஞநஞ

3. மணிமத்யம்=ப ம ஸ (5+4)
=ஞநந ஞஞஞ நநஞ

10. பங்க்தி (10 அசை)

1. த்வரிதகதி=ந ஜ ந க (5+5)
=நநந நஞந நநந ஞ

2. மத்தா=ம ப ஸ க (4+6)
=ஞஞஞ ஞநந நநஞ ஞ

3. சம்பகமாலா (ருக்மவதீ =ப ம ஸ க (5+5)
=ஞநந ஞஞஞ நநஞ ஞ

(தொடரும்.)

R. S. நாராயணஸ்வாமி ஐயர் *B.A., B.L.,*
மதுரை.

ஸ்ரீ ரவீந்திரநாததாகூர்மஹாகவி தேசபத்திமேலீட்டாற்செய்த

கடவுட்பிரார்த்தனைக்கவி.

மொழிபெயர்ப்பு.

எங்கே இதயம் பயமின்றி இருக்கும், நாணால் தலைகவிழா(து);
எங்கே அறிவை இலவசமா எய்தலாம்;பல் உட்பிரிவால்
எங்கே மாந்தர் சிதறாமே இருப்பார்; உள்ஆழ் மெய்யினின்றும்
எங்கே வார்த்தை வெளிப்படும்; சற்றெனினும் இளைப்பே இல்லாதே

எங்கே முழுத்த தேர்ச்சிஉற எவரும் மேன்மேல் முயன்றிடுவார்;
எங்கே விவகா ரிகஞானம் என்னும் தெளிந்த நன்னீரா(று)
எங்கே(டு) இழைக்கும் பழவழக்கம் எனும்பாழ் மணல்வ னாந்தரத்தே
எங்கே எனினும் வழிதப்பி யிடாதே மேன்மேல் ஏகலுறும்;

எங்கோ வேநின் அருள்தூண்டி இயக்கும் வழியே சென்றுமனம்
எங்கே யும்வி சாலம்உறும் எண்ணம் செயல்கள் புரிந்திடுவ(து)
எங்கே; இவையெல் லாம்தடை அற்(று) இயையும் பரமபதம் இருப்ப(து)
எங்கே: அங்கேவிழித்(து)எழுமா(று)எந்தாய் எந்நாட்டினர்க்(கு) அருளே.

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

ஐயவினா.

தயைசெய்து, பின்வரும் வினாக்களுக்கு விடையெழுதக் கோருகிறேன்.

1. "மாதர்கள்கற்பின்மிக்கார்கோசலைமனத்தையொத்தார்
வேதியர்வசிட்டனொத்தார்வேறுளமாந்தரெல்லாம்
சீதையையொத்தாரன்னாடிருவினையொத்தாண்மற்றைச்
சாதுகைமாந்தரெல்லாம்தசரதன்றன்னையொத்தார்."

என்னு மிவ்விராமாயணப்பாட்டில்,

ஒத்தார் என்ற வினைமுடிபுகளுக்கு ஹேதுக்களெவை?
சாதுகைக்குப் பொருளென்னை?

2. "வதனமைந்தான்குஞ்சியாகாயன்சேய்மூனம்வந்தநம
வதனமைந்தான்குஞ்சிதையாவியமன்றன்வாழ்வுமைந
வதனமைந்தான்குஞ்சிசூழ்வயற்கோமுத்திமன்னினிய
வதனமைந்தான்குஞ்சிதபாதமேடல்வளத்திருவே."

என்னும்,மீனாட்சிசுந்தரம்பிள்ளையியற்றிய துறைசையந்தாதியி னிறுதிப் பாட்டின் பதவுரையையும் எழுதுக.

வண்ணார்பண்ணை }
யாழ்ப்பாணம் }

சி. சிவசங்கர ஐயர்.
பள்ளிக்கோடு.

அநுதாபக்குறிப்பு.

இச்சங்கத்தின் அங்கத்தினருள் ஆங்கிலபாஷாவிற்பத்தியும்தமிழ்ப் பாண்டித்யமுமுடையவர்களான சென்னை திரு. த. கனகசுந்தரம்பிள்ளை B.A., அவர்கள் 28—6—22லும், சேலம்காலேஜ் தமிழ்ப்பண்டிதர் T. S. நடராஜையரவர்கள் 2—7—22லும் இவ்வுலகவாழ்வைத்துறந் தமை கேட்டு மிகவும் வருந்துகிறோம். இவர்கள், பல ஆண்டுகளாகச் சங்கத்தனித்தமிழ்ப்பரிக்ஷை ஆங்கிலத்தமிழ்ப்பரிக்ஷைகளுக்குச் சோத கர்களாகவும் மேற்பார்ப்பவர்களாகவும் இருந்து கைம்மாறுகருதாது சங்ககாரியங்களை நன்கு நடத்திவந்திருக்கிறார்கள். இவர்களையிழந்து வருந்தும் இவர்கள் குடும்பத்தார்க்கு நமது அநுதாபத்தைத் தெரிவித் துக்கொள்கிறோம்,

பத்திராதிபர்.

ஸ்ரீமத்-நடராஜையரவர்கள்.*

சேலம் முனிசிபல்கலாசாலையில் தலைமைத்தமிழ்ப்பண்டிதராயிருந்த ஸ்ரீமத் நடராஜஐயரவர்கள் சென்றஜூலைமீ 2உ இம்மண்ணுலகை நீத் தனரென்ற செய்திகேட்டு நம் தமிழுலகம் பெரிதும் துக்கிக்கின்றது. ஐயரவர்கள் திருவேங்கடமலைக்குச் சென்று திரும்பியபின் காலிற்றைத்த கல் காரணமாகக் கொப்புளத்தால், சென்ற ஒருமாதமாக வருந்தினர். தகுந்த வைத்தியம்பார்த்தும் சொஸ்தமாகாமல் திடீரென்று சென்ற ஜூலைமீ 2உ சிவபிரான்திருவடிநிழலை யெய்தினர். ஸ்ரீமத் சாமிசரவணப் பிள்ளையவர்களிடத்து ஐயரவர்கள் இளமைமுதல் இயற்றமிழ்பயின்று வல்லுநராகிக் கம்பராமாயணச் சொற்பொழிவாற்றுந் திறத்திலும், மிகுந்ததேர்ச்சிபெற்றுச் சேலம் முனிசிபல்கலாசாலையிற் சென்ற இருப தாண்டுகளாகத் தமிழ்ப்பண்டிதர்வேலைபார்த்துவந்தனர். தெய்வபக்தி, நடுவுநிலைமை, வாய்மை, கருணை யாதிய நல்லொழுக்கங்களில் மிகச்சிறந்து மாணவர்க்குக் கல்வியை ஊக்கமுடன் ஊட்டிவந்த இவரை இழக்க

* இவர்விஷயமாக அநுதாபக்குறிப்பும் இரங்கற்பாக்களும் பலரிடமிருந்து வந்துள்ளனவேனும் விரிவஞ்சி இவ்வொன்றே வெளியிடப்பட்டது. (ப-ர்.)

நேர்ந்தது நம் தமிழ்மக்களின் துரதிர்ஷ்டமே. இவரிடத்திற் பயின்ற மாணவர்பலர் F. A. (யப். ஏ.) மெற்றிக்குலேஷன் சங்கத்தமிழ்ப்பரீட்சைகளில் இராஜதானிக்கு முதலாகவும் இரண்டாவதாகவும் தேறியிருக்கின்றனர். தனித்தமிழ்ப்பரீட்சையிலும் சிற்சிலமாணவர் இவரிடம் பயின்று தேர்ந்திருக்கின்றனர். அடியேனையும் தமது மாணவனாக ஏற்றுப் பண்டிதபரீட்சையாதியபரீட்சைகளுக்குரிய பாடங்களைப் போதித்து விருத்தியெய்தச் செய்தனர். அன்றியும், சங்கஸ்தாபகரான ஸ்ரீமான் பாண்டித்துரைத்தேவரவர்கள் பெயரிட்டு மஹாஜனங்களின் பேருதவியால் 600ரூபா பெறுமானமுள்ள இலக்கண இலக்கிய வுரைநடைப்புத்தகங்களடங்கிய ஒருபுத்தகசாலையையமைத்துச் சேலம்கலாசாலைக்கு உதவியுள்ளார். இவரையிழந்த குடும்பத்தார்க்குச் சிவபெருமான் ஆறுதலளிப்பாராக.

இவர் சிவபதமடைந்தமைக்காற்றாது பாடிய இரங்கற்பாக்கள்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தேனடுத்த கொன்றையினன் றிருவடிக்கண் அன்பென்றுந் திகழு நின்னை
யானடுத்து நெடுங்காலம் பயின்றதெலாம் சரமகவி யியம்பற் கேயோ
வானடுத்து வருமாரி யெனவேசொற் பொழிவாற்றும் வள்ளால் அன்பு
தானடுத்துக் கலைபயில்நின் மாணவர்தம் துயரெங்ஙன் சாற்று மாறே.

ஒன்னலரும் போற்றிசைக்கு முயர்கல்விப் பெருந்தகையாய்! உவந்து நோக்கி
அன்னையினு மன்புமிக வழைத்தென்னை யருகிருத்தி யமுதம் போலும்
பன்னரிய தமிழ்க்கலைகள் பண்புடனே பகர்ந்தநட ராச மேலோய்
மன்னுயிரி வாற்றாநின் கிளைஞர்மனந் தேறவரன் அருள்க மாதோ.

வெண்பா.

துந்துபி யாண்டதனிற் சோகமிது னத்திங்கள்
அந்தம்போ னுற்றதிதி யட்டமியில்—முந்தும்
அருங்கதிர்நா ளேயெம் நடராச வாசான்
திருமேனி நீங்குந் தினம்.

இங்ஙனம்,

R. Thimmappa Aiyer.

புத்தகமதிப்புரை.

1. உலகியல்விளக்கம்:— இது, யாழ்ப்பாணத்திற் சுன்னுகத்துள்ள ஸ்ரீராமநாதவித்யாலயத்திற் றமிழ்ப்பண்டிதராயிருந்தவரும் இப்போது மாவிட்டபுரம் ஸென்ட்ரல்காலேஜில் தமிழ்ப்பண்டிதராயிருப்பவருமான ஸ்ரீமத். K. S. நவநீதகிருஷ்ணபாரதியாரவர்களால், பன்னெறிபற்றிப்பாடிய பல அகவற்பாக்களையுடையதொரு தொகைநிலைப் பனுவலாயுள்ளது. இதன் பாக்கள் பலவும் முன்னமே செந்தமிழில் தனிநிலைச்செய்யுட்கோவை என்ற தலைப்பில் வெளிவந்தமையால் அவற்றின் சொற்றொடை நடைகளும் பொருளின்பம் சுவைகளும் பண்டிதர் பலராலும் அறியப்பட்டன. இப்பனுவலுள் அறநெறியியல் என்னும் பகுதிமட்டும், இதுபொழுது, மட்டுநகர்வாசியும் சீமந்தனிபுராணம், விநாயகமான்மியம் முதலிய செய்தவருமான ஸ்ரீமத். ச. பூபாலபிள்ளையவர்களாலெழுதப்பட்டதொரு விளக்கமான விரிவுரையோடு, பௌதிகசாஸ்திர விற்பன்னரான ஸ்ரீமத் மயில்வாகனபண்டிதராற் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்நூலுரைகளினடைகளை யிடையிடையே படிக்கும்பொழுது தொன்னூலுரைகளினடைகளைத் தொடர்ந்துசெல்லுந்தோற்றமுடைமை புலப்படுகிறது. பரதேசத்துள்ள பண்டிதசிரேட்டர்களுங் கொண்டாடும்படியான பெருமைவாய்ந்த பாரதியாரது தமிழ்ப்புலமை பாராட்டத்தக்கது. வேண்டுவோர் மானேஜர், கிளவ் அச்சுக்கூடம், பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

2. சிவஞானசித்தியார் சுபக்கம் மூலமும் உரையும்:—இது, சைவசித்தாந்த சாத்திரங்களுட்சிறந்த சிவஞானசித்தியாருக்குப் பலவுரைகளிலிருந்துந் தெரிந்தவிடயங்களையும், அவற்றில் விளங்காத விடயங்களையும் ஒருங்குவிளக்கவேண்டி யிலங்கைத்தீவகத்துள்ள சிவநேசச்செல்வர்களிற்சிறந்த திருவிளங்கவாசிரியரால் எழுதப்பட்ட தெளிவான வுரையோடு கூடியது. இடையிடையே படித்தமட்டில் நன்றுயெழுதப்பட்டிருப்பதாகவே புலப்படுகிறது, இதன் முதலிரண்டு சஞ்சிகைகள் உரையாசிரியராற் பதிப்பிக்கப்பட்டன. மூன்றுஞ்சஞ்சிகை இலங்கை நியாயவாதி ஸ்ரீமத் பண்டித க. சிதம்பரநாதன் அவர்களால் வேண்டிய இடத்து விரித்தெழுதிப் பதிப்பிக்கப்பட்டது. முதலாவது சஞ்சிகை

விலை 60 சதமும் இரண்டாவது மூன்றாவது சஞ்சிகைவிலை தனித்தனி 50 சதமும் உடையன. வேண்டுவோர் பண்டிதர் க. சிதம்பரநாதன், புரோக்டர், S. C. கொழும்பு என்ற விலாசத்துக்கு எழுதிப்பெறலாம்.

3. கல்பதரு:–இது, சென்னையிலிருந்து சித்திரசகிதமாய் வெளிவரும் ஒருமாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இதன் ஆசிரியர் ஸ்ரீமத். K. P. சேஷாத்திரி ஐயங்காராவர். இதில், கைத்தொழில், வியாபாரம், வியவசாயம், கல்வி, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளைப்பற்றி வியாசங்கள் வெளியிடப்படுமென்று தெரிகிறது. நமக்குக்கிடைத்த இதன் நான்காந்தொகுதியின் முதற்பகுதியிற் பல அரியவிஷயங்கள் வெளிவந்துள்ளன. இதன் வருடச்சந்தா உள்நாட்டுக்கு ரூ 3. வெளிநாட்டுக்கு ரூ 4. வேண்டுவோர் K. P. சேஷாத்திரி ஐயங்காரவர்கள், 64 இராமசாமிதெரு, சென்னை என்ற விலாசத்துக்கெழுதிப் பெறலாம்.

4. குமரன்:—இது, தமிழ், தமிழ்நாடு, சமயம், அறிவு, வியாபாரம், தொழில், முதலியவற்றின் வளர்ச்சிகருதி மாதமொருமுறை காரைக்குடியிலிருந்து ஸ்ரீமத் சோ. முருகப்பசெட்டியாரவர்களால் வெளியிடப்பெறும் ஒரு தமிழ்ப்பத்திரிகை. இதன் முதற்றொகுதியின் முதன்மூன்று பகுதிகள் நமக்குக்கிடைத்தன. அவை தக்கவர் பலரால் எழுதப்பட்ட விஷயங்களையுடையனவாயிருக்கின்றன. இதன் வருடச்சந்தா உள்நாடுகளுக்கு ரூ 1—8—0. வெளிநாடுகளுக்கு ரூ 2–0–0 மாதிரிப் பிரதியின் விலை ரூ 0–2–6. வேண்டுவோர் ஸ்ரீமத் சொ. மு. முருகப்பசெட்டியாரவர்கள், குமரன்பத்திராதிபர், காரைக்குடி என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

5. பர்மா நாட்டுக்கோட்டையார்சங்கத்தின் பொருளுதவிபெற்றுக் காரைச் சிவனடியார்திருக்கூட்டத்தாரால் வெளியிடப்பட்ட மனிதர் வாய்ப்படும் அகிலஉயிர்ப்பிராணிகளின்மகாநாடு, ஐயனாரின்பதிலுத்தரம், மநுநீதிச்சோழன், ஆணிமாண்டவியர், சிபிச்சக்ரவர்த்தி, சுந்தரர் திருநாள் என்னுந் துண்டுப்பிரசுரங்கள் வந்தன. இவை, ஜீவகாருண்யம், தெய்வபக்தி, அடியார்பக்தி, சமயநிலை முதலிய அரிய விஷயங்களை நன்கு புகட்டக்கூடிய இனிய நடையில் எழுதி வெளியிடப்பட்டுள்ளன. வேண்டுவோர் காரைக்குடிச் சிவனடியார்திருக்கூட்டத்தார்க்கு எழுதிப் பெறலாம்.

6. ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர் அருளிச்செய்த எதிரொலிகள்:— இது, ஞானபாநுப்பத்திராதிபரும், சச்சிதானந்தசிவம் முதலிய பல புத்தகங்களை யெழுதிவெளியிட்டவரும் ஆகிய ஸ்ரீமத். சுப்பிரமணியசிவம் அவர்களால் எழுதப்பட்டது. சிவாஜியின் சரித்திரத்துள் இடையிடையே சிலவற்றைக்கூறுவது. இதன் விலை அணா 8. வேண்டுவோர் சாது இரத்தினசற்குரு புத்தகசாலை, நெ. 4/34, நயினியப்பநாயக்கன் வீதி, பார்க் டவுன் போஸ்டு, சென்னை என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

7. ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர் அருளிச்செய்த தற்கால இந்தியா:- இதுவும் ஸ்ரீ சுப்பிரமணியசிவம் அவர்களால் மொழிபெயர்த்து வெளியிடப்பெற்றது. இதில் இந்தியாவின் முற்கால தற்காலநிலைமைகள் எழுதப்பட்டுள்ளன. வேண்டுவோர் சென்னை சாது இரத்தின சற்குரு புத்தகசாலைக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

8. இராஜாகோபிசந்த்:-இது, திருவூர் மா. ரத்தினசபாபதிமுதலியாரவர்களால் நாடகரூபமாக எழுதப்பட்டது. இதன் விலை அணா 8. வேண்டுவோர் தி. மா. ரத்தினஸபாபதிமுதலியாரவர்கள், முல்லாஸாஹிப் தெரு, சௌகார்பேட்டை போஸ்டு, சென்னை என்ற விலாசத்துக் கெழுதிப் பெறலாம்.

9. கனகரத்னதீபமணி:-இது புதுவை தோ. மு. ஆ. வே. இரத்தினஸபாபதிமுதலியாரவர்களால் இயற்றப்பட்டது. இதன் விலை அணா 8. வேண்டுவோர் புதுவை அம்பலத்தாடையார் மடத்துவீதி, நெ. 2. மிஸ் ரா. நாகரத்தினம்பிள்ளையவர்களுக் கெழுதிப் பெறலாம்.

பத்திராதிபர்.

1922வரு ஜூலைமீ 12உ (துந்துபிவரு ஆனிமீ 28உ) காலை 9-30 மணிக்குக்கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

---

1. மாட்சிமைதங்கிய கனம் B. இராஜராஜேஸ்வரசேதுபதி மன்னரவர்கள்—அக்கிராசனாதிபதி.
2. மகா-ள-ள-ஸ்ரீ ராவ்பகதூர் P. சுப்பராய ஐயரவர்கள் B.A.,
3. ,, வித்துவான் R. இராகவையங்காரவர்கள்
4. ,, V. S. இராமஸ்வாமிசாஸ்திரியவர்கள் B.A., B.L.,
5. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L., M.L.C.,
6. ,, M. மாணிக்கவாசகம்பிள்ளையவர்கள் B.A., B.L.,
7. ,, K. ராமையங்காரவர்கள் B.A., B.L.,

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I. 1922வரு மார்ச்சுமீ முதல் ஜூன்மீ முடிய உள்ள சங்கம் வரவு செலவு கணக்குகளை அங்கீகரிக்கலாயிற்று.

II. மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக் கோரிய வெள்ளாளபட்டி மகா-ள-ள-ஸ்ரீ S. கிருஷ்ணசாமி ஐயரவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

III. சங்கக்காரியங்களைச் சௌகரியமாக நடத்திவரத் தவணைக்குத் தவணை வட்டிகொடுத்துவரக்கூடிய ஒரு பொறுப்பான இடத்திற் சங்கம் ரூபா 50011—5—0 யும் வட்டிக்குப் போடவேணுமென்று சங்கநிர்வாகசபையார் அபிப்பிராயப்படுகிறார்கள். மதுரையிலுள்ள Madura-Ramnad Central Co-operative Bank மூன்று மாதத்திற்கொரு தரம் 100 க்கு 6½ வட்டிவீதம் வட்டிகொடுக்கச் சம்மதிக்கும்பக்ஷத்தில் ஷை தொகையை ஷை பாங்கில் 25 மாதகால அளவுக்கு வட்டிக்குப்போடலாமென்று தீர்மானிக்கலாயிற்று.

IV. சங்க வருஷோத்ஸவத்தை நாளதுவருஷம் செப்டம்பர்மீ 23, 24 தேதிகளில் நடத்தவேணுமென்று தீர்மானிக்கலாயிற்று.

மதுரை,
12—7—1922

B. இராஜராஜேஸ்வரஸேதுபதி,
அக்கிராசனாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம்.

ஸ்ரீ:

கூடற்புராணம்.

இது, மதுரையிற்கோயில்கொண்டெழுந்தருளியுள்ள கூடலழகப்பெருமானது தலமான்மியத்தைக்கூறும் ஒரு வைணவபுராணம். இதனை இயற்றிய ஆசிரியரது ஊர் பெயர் காலம் முதலியவரலாறென்றும் தெரியவில்லை. இவர் பிறமதத்வேஷமில்லாத வைணவரென்பதும், சொல்லணி பொருளணி கற்பனை முதலியவைகளமையக் காவியமியற்றும் ஆற்றலுள்ளவரென்பதும் இந்நூலின் முதற்க ப்புச்செய்யுளாலும் பிறவற்றாலும் விளங்கும். இந்நூல், எழுநூற்றைம்பத்தேழு செய்யுள்களிற் பதினைந்துபடலங்களுடையதாக இயற்றப்பட்டது. இற்றைக்கு நூற்றுமுப்பது வருடங்கட்குமுன் எழுதப்பட்ட இந்நூலின் ஏட்டுச்சுவடியொன்று சங்கத்துப் பாண்டியன்புத்தகசாலையிலுள்ளது. கன்னபரம்பரையாகவந்த சில வரலாறுகள் இந்நூலில் ஆங்காங்கு வலியுறுத்தப்படுகின்றன. அவற்றுள், ஆழ்வார் (சடகோபர்) "அண்டகோளத்தாரணு" என்னும் முதற்குறிப்புள்ளசெய்யுளாற் சங்கத்தாரை வென்றனரென்பது மொன்று—(கடவுள்வணக்கம் செய்புள் 13 பார்க்க). இந்நூலின் அருமை பெருமைகளையும், வைஷ்ணவபரமான மதுரைமான்மியத்தையும் அறியவிரும்புவார்க்கு உபயோகமாக்கவும், அச்சில்வராத இந்நூலின் ஏட்டுச்சுவடி பழுதுபடாதுகாக்கவும் கருதி, ஏடெழுதுவோரால் நேர்ந்தபிழைகளைத் திருத்தியும், பொருள்விளங்காத சிலபாடல்களை ஏட்டிலுள்ளவாறேபதித்தும் இந்நூல் இப்பகுதிமுதற் புத்தகவுருவிற் செந்தமிழ்ப்பிரசுரமாய் வெளியிடப்படுகிறது. இந்நூற்பிரதி ஒன்றுமட்டும் இருத்தலாற் சில இடங்களில் உண்மைப்பாடங்கண்டுகொள்ள இயலாதிருக்கிறது. இந்நூற்பிரதிகள் வைத்திருப்போர் கொடுத்துதவுவார்களாயின் உண்மைப்பாடங்கண்டு வெளியிடுதற்கு அநுகூலமாயிருக்கும்.

உதவிப்பத்திராதிபர்.

ஸ்ரீ:

கூடற்புராணம்.

காப்பு.

பொன்பூத்தபுரிசடையும்பூண்மணிப்பொன்னீண்முடியு
மின்பூத்தவொருபாலுந்திருமார்பும்வெண்ணீறு
மன்பூத்தமான்மதமுமானிடமும்வளையுமணிந்
தன்பூற்றியுலகளிக்குமவரேயெம்வினைதவிர்ப்பார். (1)

விட்டாங்குதிசைப்பாலர்வசுக்கண்மருத்துவர்வேதன்
கட்டாங்கச்சனகர்சண்டர்குமுதருருத்திரர்காக்கு
மட்டாங்கவிமானத்திலமர்ந்துநின்றுதுயின்றியோக
நிட்டாங்கமுறைநந்தவரைநெஞ்சுருகியஞ்சலிப்பாம். (2)

காப்புமுற்றும்.

கடவுள்வணக்கம்.

உலகெலாம்விளக்குஞ்சோதியுதயமாயகிலமாகிப்
பலகலாபேதமாகியபேதமாம்படிவமாகி
யலகிலாப்பகுதிமாயைக்கதிகளும்புருடனாகி
யிலகியபரந்தாமத்தையிதயதாமரையுள்வைப்பாம். (1)

வெண்ணிறவளைகோடேந்திவிண்டுடைமதமேயோங்கிப்
புண்ணியவடிவாய்ஞானபோதகமுகத்தோனாகிக்
கண்ணாதுமுளரியான்பொற்கடைத்தலைக்காவல்பூண்டு
தண்ணளிபுரியுஞ்சேனைத்தலைவனைவணக்கஞ்செய்வாம். (2)

வேறு.

மேகத்துட்படுமுருமரன்மின்னுவேபிரம
னாகத்தோன்றுருவிரண்டையுமொன்றுளேயடக்கி
நாகத்துட்படுத்தறிதுயிலமருநாரணப்பே
ரேகத்துட்பொருளெவனவனிணையடிபணிவாம். (3)

பிலங்கடந்தசேட்டனந்தனைப்பெருந்திருவடியை
யுலங்கடந்ததோளனுமனையுந்திமேற்றோன்றித்
தலங்கடந்தவன்றன்னையைம்படைகளைப்பதினெண்
பலங்கடந்ததொல்பரமபாகவதரைப்பணிவாம். (4)

அன்றுமாறனுட்கிடத்தியவுபநிடதார்த்த
நின்றுநீவெளிப்படுத்தெனநெடியமால்பணிப்பச்
சென்றுகூடலிற்பிறர்மதத்திரள்களைச்சிதைத்து
வென்றவான்கிழிவீட்டினார்தாட்டுணைவிடேமால். (5)

வேறு.

பாற்கடல்புதுவையாகப்பட்டர்கோன்வரைமத்தாக
மேற்குணங்கயிறதாகவிண்டுவேமதிக்குங்காலை
மாற்கணிதுளவமென்னுமருந்துடன்பிறந்தகோதை
காற்கமலங்கள்சூடச்சிவந்ததென்கவிவெண்மாலை. (6)

வேறு.

வில்லாண்டவடவரையான்மணம்புணரவட்டாங்கவிமானமென்னு
மில்லாண்டம்புயன்சனகர்காசிபனார்பிருதுவம்பரீடன்கூட
றெல்லாண்டபுரூரவசுமலயகேதனன்முதலோர்தொழப்புத்தூரான்
பல்லாண்டுபாடவந்தமல்லாண்டதோளனடிபணிதல்செய்வாம். (7)

மதியிருக்குந்திருமுகமுங்கனியிருக்குந்துவர்வாயும்வழுத்துமன்பர்
துதியிருக்குங்குழைக்காதும்புயலிருக்குங்குழற்கானுந்துணைக்கண்மானும்
பதியிருக்கும்பொருப்பனையதனதடமுந்துடியிடையும்பதுமக்கையுங்
கதியிருக்குங்குடிபோன்றமதுரவல்லியார்பதமுங்கருத்துள்வைப்பாம். (8)

புறவடியேபுத்தகமாய்வளைக்கரமேவீணையாய்ப்போதன்காத
லுறவடிக்கொண்டெழுந்தடர்த்ததிருமுலையேகுண்டிகையாயுண்மையேதன்
னிறவடிவாய்வெண்கலையேதண்கலையாய்த்தரித்தெளியேனெஞ்சந்தானே
நறவடிவெண்டாமரையாயுறைந்தருள்வாளன்னம்போனாவின்செல்வி. (9)

நத்தினையும்வளையினையும்பொறித்ததடங்கரத்தொருத்தன்ஞாலமூல
வித்தினையும்வேரினையுங்கடந்தபிரான்சேலாமைவெண்கோட்டேனஞ்
சித்தினையவரிகுறண்மூன்றிராமர்கண்ணன்கற்கியெனச்சிறந்தமூர்த்தம்
பத்தினையுமெட்டினையும்பத்திணையும்படியுருகிப்பரவுவாமே. (10)

தனிப்புளியிலினிப்புமிகுந்தமிழ்ச்சுருதிசிறுத்தவருஞ்சடகோபாசான்
செனிப்பொழிந்தபொய்கையார்பூதத்தார்மயிலையர்கோன்சேரன்புத்தூர்
முனிப்பெருமான்றொண்டரடிப்பொடிபாணர்மழிசைமங்கைமுதல்வன்கோதை
பனிப்பகலுமதாகவிபாதமலரோதமலம்பாறுமன்றே. (11)

வேறு.

தமிழ்க்கடன்ஞாலமுற்றும்வயிணவச்சமயந்தித்திச்
சிமிழ்ப்புறுபுறமதங்கடெரிந்துவேரகழ்ந்துபோக்கிக்
குமிழ்ப்புறுபுளகாநந்தக்குஞ்சியஞ்சலிக்கைகூப்பி
நிமிர்க்குமெம்பெருமானுரைநினைத்தலுஞ்சனித்தல்போமே. (12)

அண்டகோளத்தாரென்னுமாரியத்தமிழாலன்று
தண்டமிழ்ச்சங்கம்வென்றசடகோபர்தாமேசிற்பங்
கண்டதோர்வடிவாற்பேசத்திரைப்புறத்திருந்திக்காலத்
துண்டெனப்பதின்மர்பாடலுத்தரித்தவர்தாள்போற்றி. (13)

கடவுள்வணக்க முற்றும்.

ஆகக்கவி—15.

அவையடக்கம்.

கோதையார்தாதையார்தாங்கூறுபல்லாண்டுகேட்குங்
காதையார்நிரப்பவல்லாராயினுங்கருணேமாயன்
சீதையார்பொருட்டாற்சென்றுசபரியுமணிலுஞ்செய்த
பேதையார்சிறப்பென்கொண்டானவன்செயல்பேசற்பாற்றே. (1)

தாதுலாம்பூவின்செல்விதன்னிலுநலத்தவாய
காதலாய்விண்டுசித்தன்கவித்தமிழ்க்கின்பங்கூர்ந்தா
ஞதலாலுந்திபூத்தவண்ணல்சீர்பாடவல்லார்க்
கீதலாலுறுதியுண்டோயான்றுணிந்ததுவுமென்னும். (2)

சூதங்கந்தகம்பாடாணஞ்சுத்தியாற்குற்றம்போக்கி
மீதங்கங்கூட்டுமோயுள்வேதியன்போலமேலோர்
மாதங்கங்காத்தகூடன்மதுரையான்புகழ்நான்பேசும்
போதங்கண்டேதமெல்லாம்போக்கிநன்காக்குவாரே. (3)

மச்சகந்தியைப்பராசமாமுனிசுகந்தியாக்கி
முச்சகம்புகழக்கூடிமுயங்கிமேன்மகப்பெற்றுங்கு
நிச்சலும்பயனென்றில்லேனிகழ்த்துபுன்கவியீதேனும்
விச்சைகற்றுணர்ந்தமேலோர்விழுப்பயன்மிகச்செய்வாரே. (4)

அவையடக்கமுற்றும்.

ஆகக்கவி—19.

வாழ்த்து.

வருணமோர்நான்குமோங்கவகுத்தவாச்சிரமநான்கும்
பெருகவான்மாரிபெய்கபெருங்கொடைவேந்தனீதி
தருகநான்மறையாறங்கந்தழைப்பநாரணன்சீர்மல்கத்
திருமகள்கருணையாலெத்திறத்தரும்வாழ்கமாதோ. (1)

வாழ்த்துமுற்றும்.

ஆகக்கவி—20.

புராணவரலாறு.

பூதங்கள்கோடிபுவனங்கள்புத்தேளிர்யாரு
மாதங்குமார்பன்மலர்நாபியிற்றோன்றுமுன்னம்
வேதங்கள்கண்டமிருதிக்குள்வரும்புராண
பேதங்கடம்முட்பிரமாண்டபுராணமன்றே. (1)

ஆண்டப்புராணத்தருங்கேத்திரமான்மியப்பேர்க்
காண்டத்திலெண்பத்திரண்டாங்கதையாத்தொடங்கி
யீண்டப்பனிரண்டினிதாகத்தொண்ணூற்றுமூன்றாய்த்
தூண்டுற்றகூடன்மதுராபுரிப்பெற்றிசொல்லும். (2)

முன்னாரணன்சொன்முகத்தாலொருநான்முகற்குச்
சொன்னானதனைச்சுரர்மாதவர்சூழ்ந்துபோற்ற
நன்னாரதனுக்கயன்கூறலுநாரதன்றான்
பின்னாள்வியாதற்குணர்த்துங்கதையீதுபேசின். (3)

ஈராறுநாமத்தொகையாயினவத்தியாயத்
தோராறதிற்பாதியென்றோர்கிரந்தங்களேனும்
யாராதரத்தொடுரைத்தாரெவர்கேட்கலுற்றார்
நாராயணற்கங்கவரேயுவப்பாயநல்லோர். (4)

கோடுந்தவேகவதிமாநதிக்கொள்கைபாடி
காடுக்கருகலஞ்சேர்ந்தநயிமிசப்பேர்
குடும்வனமும்வருணித்தெழுவாய்த்தொடுப்பிற்
றேடும்வியாதர்தமைமாதவர்கேட்டல்செப்பி. (5)

இரண்டாங்கதையிற்கடம்பாடவிக்கேசனெய்தி
முரண்டாழ்தவந்தான்முயலும்பொழுதோங்குசெந்தி
யரண்டாவவானோரயன்பாலடைந்தோடியோதத்
திரண்டாரணனுந்திருப்பாற்கடற்சேறல்பேசி. (6)

மூன்ருவதனிற்சுரரெண்ணமுடியும்வண்ணந்
தோன்ருதமாயன்சிவன்முன்புதொடர்ந்துதோன்றி
மீன்ருவுகண்ணுடனேமேவவிதிக்குமாறுஞ்
சான்ருண்மைமிக்கதலப்பெற்றியுஞ்சாற்றியிப்பால். (7)

நாலாங்கதையிற்கடலேழுடனுகதீர்த்த
மேலாயதுங்காசிபனுச்சிரமத்தின்வீறுஞ்
சேலாடியசக்கரதீர்த்தமுங்காசிபன்ருன்
மாலாற்புகழ்ந்துமகப்பேறடைமாண்பும்வாழ்த்தி. (8)

ஐந்தாவதிலெண்கயஞ்சூழ்கயதீர்த்தவார்ப்பு
மைந்தார்சனகாதியர்வாசமுந்தோதவெற்பு
முந்தானவெற்பின்முனிதீர்த்தமும்வாலகில்லர்
தந்தாபதமும்பிருதுப்பெறுஞ்சால்புமோதி. (9)

ஆருவதிலாம்பிரகானனத்தாழியேவி
மாருதவென்றிமதுராதிபன்காலநேமி
வீருடல்வென்றதிறனும்வளைவீழ்தடத்தின்
கூருனதோர்சக்கரதீர்த்தமுங்கூறிமாதோ. (10)

ஏழாவதனுண்முனிரோமசனேத்தெடுப்பச்
சூழானவெற்பினரகேசரிவந்துதோன்றித்
தாழாதசிம்புட்சமர்வென்றுபுலத்தியற்குக்
கேழாயமைந்தற்றருங்கீர்த்திகிளத்தல்செய்து. (11)

எட்டாவதனுண்மதுராபுரத்தம்பரீடன்
மட்டார்துளவோற்பணிந்தானமலையினெய்தித்
தட்டாதமுத்திபெறுமாறுஞ்சனகர்பேறு
நிட்டாபரரோமசராயுளும்நேர்நிகழ்த்தி. (12)

ஒன்பானதனிற்புருகூதனுரைத்தசாபந்
தன்பானிகழத்தரைமேயவுருப்பசிக்கே
யன்பார்புரூரவசுவோர்மணவாளனுகித்
தென்பார்புரந்துகதிசேர்ந்ததுந்தேர்ந்துரைத்து. (13)

பத்தாவதனுண்மலயத்தொசன்பாய்விமான
முய்த்தாடுகங்கையிடபாசலத்துற்றவாறு
மைத்தாழ்வரைச்செல்விதடாதகையானவாறுஞ்
சித்தாமரன்கேத்திரபாலனுச்சேர்ந்தவாறும். (14)

பன்னொன்றதாயகதையிற்பரமார்த்தமார்க்க
மென்னென்றுசிவல்லவனேத்தலுஞ்செல்வநம்பி
பின்னன்புசெய்யப்பெருமானருள்செய்துபட்டர்
மன்னன்றனைப்புள்ளரசால்வருவித்தவாறும். (15)

பனிரண்டதனிற்பலர்கூறலும்பட்டர்கோமான்
றனிநின்றுவேதப்பொருட்சத்தியஞ்சாற்றலும்பின்
கனிகின்றசெம்பொற்கிழிபெற்றதுங்காட்சிவாழ்த்து
முனிவன்செயலுமுறையேவிரித்தோதல்செய்வாம். (16)

புராணவரலாறு முற்றும்.

ஆகக்கவி—36.

ஆற்றுப்படலம்.

பூவின்கண்ணுறைபூவைமணாளனை
யாவுந்தன்வயிற்காட்டுமிறைவனைக்
கோவிந்தன்றனைக்கூடலழகனை
நாவின்பம்பெறப்பாடுதுநாமரோ. (1)

போற்றிநீர்மைப்புத்தேளருளான்மழை
சாற்றிநீலமிடற்றினர்தாங்கிய
மாற்றினீரடிவையமெலாம்பெறு
யாற்றினீர்வரலாற்றையியம்புவாம். (2)

பாகசாதனன்பாய்கடல்வேந்தன்பா
லேகசாதகத்தேவியதூதென
மாகசாரணர்வாகனமாகும்வெண்
மேகசாலம்விரிகடற்பாய்ந்ததே. (3)

பாய்ந்தவெண்புயல்பையப்பரந்துநீர்
மேய்ந்துதண்கடல்வேந்தன்விடுதிறை
வாய்ந்தகொண்டுவலாரிமருகனூர்க்
கேந்துமீள்வவென்றெண்ணியதென்னவே. (4)

வளர்தருக்குறிஞ்சித்தடமால்வரை
ஏர்த்திறங்களுங்கண்டவன்கேகய
மனத்தனாயெதிர்த்தன்னைகுயிற்குழாம்
செளித்தமின்னைப்பணியென்றகேடவே. (5)

பரவைதந்தவமுதநன்பானமு
மரமடந்தையர்கொங்கையணைதலுந்
தரணிகாணத்தகாதெனவானவர்
திரைமறைத்ததின்மைம்முகில்செம்முமால். (6)

செஞ்செஞ்ஞாயிறுதீண்டல்பொருதெனச்
சஞ்சைமாதுதனதுடலெங்கணு
மஞ்சனத்துகில்போர்ப்பதுமானுமான்
மஞ்சியங்கிமயங்கியதோற்றமே. (7)

வானவேந்தைமணிமுடிசூட்டுதற்
கானபேரியசனியறைவன
தானநீரனதாரைபைந்தோரண
மானுமிந்திரவில்லிடும்வண்ணமே. (8)

கண்ணன்சீர்த்தியுங்கண்ணுதல்சீர்த்தியும்
விண்ணின்மீனமுந்தேவருமேதினிக்
கெண்ணரெண்ணுமென்றிட்டவுரைகள்போற்
றண்ணெனும்மழைத்தாரைகள்வீழுமால் (9)

சோதிதூங்குதுளியிடைத்துள்ளியே
காதிவீழ்ந்தகனேபலராசிகள்
சாதகங்கடரித்திடுமுட்டையைப்
பூதலங்களில்வீசுதல்போன்றதே. (10)

ஆகரம்பெறுமண்டர்கட்காகமான்
மாகரங்கொடுவாரிகடைந்தநாள்
வீகரம்பெறவீசியவெண்டுளிச்
சேகரங்கள்போற்சீகரஞ்சிந்துமே. (11)

நிருதர்போர்க்குவிண்ணீர்க்கங்கையிட்டபொன்
பொருதுவாகைபுனைந்தபுலவர்பின்
றெரிதல்வேண்டிச்சில்லிச்சுளகாலளாய்ச்
சொரிதல்போலச்சொரிந்தனசோனையே. (12)

அருக்கன்மண்டிலங்கண்டவருவரை
யிருக்குஞ்சித்தரிரதவாதஞ்செய்து
செருக்கிவான்சுனைத்தென்றுலைவெள்ளியை
யுருக்கிவார்த்தெனவோடுமருவியே, (13)

அவனிகேள்வனேயாயினகாரின
மிவனையேந்துபுள்ளேய்வனமால்வரை
தவழும்வெள்ளருவிக்குலந்தானுமவ்
வுவணன்மார்பிடைப்பாந்தலையொக்குமே. (14)

முகில்சொரிந்தமுதுபுனல்வெற்பின்வீழ்ந்
தகில்களுந்தியரைத்தரைத்தாட்டுவ
மகியெனுந்தனிமங்கையைக்கங்கைதா
னகிலணிந்திடப்பூசியநண்புபோல். (15)

காமரம்பையிறம்பிகலையவே
காமரம்பையிறம்பிகலையவே
காமரம்பையிறம்பிற்கடவுமே
காமரம்பையிறம்பிற்கடவுமே. (16)

ஆகமாகவளாகங்கலக்குமே
யாகமாகவளாகங்கலக்குமே
நாகநாகமைநாகம்புரையுமே
னாகநாகமைநாகம்புரையுமே. (17)

பற்பதத்தலைப்பாணியசைவன
பற்பதத்தலைப்பாணியசைவன
கற்பகத்தருக்காயுநனையுமே
கற்பகத்தருக்காயுநனையுமே. (18)

மாமயங்கவராகவரியுமே
மாமயங்கவராகவரியுமே
மாமயங்கவராகவரியுமே
மாமயங்கவராகவரியுமே. (19)

வேங்கையோடுமெறிவனவேங்கையே
தூங்கலேகப்பிளிறுவதூங்கலே
வாங்கலேய்கழையைச்சுளிவாங்கலே
சாங்கையன்குறிஞ்சிப்புனற்காங்கையே. (20)

சிலைத்தழும்பிற்சிலவர்குரவையே
சிலைத்தழும்பிற்சிலவர்குரவையே
நிலைத்தணித்தங்கிருப்பைநிவப்பவே
னிலைத்தணித்தங்கிருப்பைநிவப்பவே. (21)

பாடலம்புறவம்பருந்தொக்கவெம்
பாடலம்புறவம்பருந்தொக்கவெம்
பாடலம்புறவம்பருந்தொக்கவே
பாடலம்புறவம்பருந்தொக்கவே. (22)

காலையேநிகர்போவதுங்காலையே
மாலையேயெனநாறலுமாலையே
சேலையேறலைவிந்தைதன்சேலையே
பாலையேய்வனபாய்வனபாலையே. (23)

கோடிசந்துகக்கொட்டியலைக்குமே
கோடிகந்துகக்கொட்டியலைக்குமே
பாடிவந்தனைநொந்துபயப்பவே
பாடிவந்தனைநொந்துபயப்பவே. (24)

தோன்றியஞ்சனிசிக்குருத்தூருமே
தோன்றியஞ்சநிசிக்குருத்தூருமே
கான்றிரியமுயலுங்கலுழியே
கான்றிரியமுயலுங்கலுழியே. (25)

சில்லையென்னப்பறிப்பனசில்லையே
யில்லைமோதாதிருப்பதுமில்லையே
குல்லைமாவிலணிவதுங்குல்லையே
முல்லைவானியன்போற்புகுமுல்லையே. (26)

கொடிதுவண்டலையுந்திக்கொழிக்குமே
கொடிதுவண்டலையுந்திக்கொழிக்குமே
கடியதெங்கங்கதலிகழையுமே
கடியதெங்கங்கதலிகழையுமே. (27)

கொண்டலிற்கிணைக்கொட்டுமுழவுமே
கொண்டலிற்கிணைக்கொட்டுமுழவுமே
தண்டலைக்குவகுளங்கடத்துமே
தண்டலைக்குவகுளங்கடத்துமே. (28)

கன்னலாலையஞ்சாறுகளிப்பவே
கன்னலாலையஞ்சாறுகளிப்பவே
யன்னலாரையுமாடவரையுமே
யன்னலாரையுமாடவரையுமே. (29)

தருதலேசனைப்போற்கண்டருதலே
துரிதமேகப்புரிவதுரிதமே
திருதமாலைப்பெயராகிருதமாய்
மருதமேல்கொடுசெல்லுமருதமே. (30)

முத்தமிழ்த்திடங்காட்டுமுனிவனோர்
முத்தமிழ்த்திடங்காட்டுமுனிவனே
ரத்தமுற்றரவிந்தமடக்குமே
யத்தமுற்றரவிந்தமடக்குமே. (31)

புலவுணக்கலனேகம்புளினமே
புலவுணச்கலனேகம் புளினமே
யிலவணத்திணையத்தலையெற்றுமே
யிலவணத்திணையத்தலையெற்றுமே. (32)

வாரிக்கொண்டுவருஞ்சத்தியோடுமே
வாரிக்கொண்டுவருஞ்சத்தியோடுமே
யோரக்கண்டலமந்துறைபார்க்குமே
யோரக்கண்டலமந்துறையார்க்குமே. (33)

பொய்தயங்குமருங்குலார்பொய்தலும்
பைதன்மார்விடுமோடமும்பைதலே
யெய்தன்மாயன்வருணனையெய்தலே
நெய்தல்குடிமணப்பனநெய்தலே. (34)

விலங்கலைத்தந்துவீணுரைமேற்கொண்டு
விலங்கலைத்தந்தவெய்யருமாயின
மலங்கெடுத்துளகன்றுவரம்பெறீஇ
மலங்கெடுத்துளர்போலுமவ்வாரியே. (35)

ஆறுமஞ்சதிணை நடவிச்சின
மாறுமஞ்சுக்கோலக்கென்றடங்கியே
தேறல்கொண்டுரைக்கத்தெளியாதமுன்
றேறல்கொண்டுரைக்கப்பின்றெளிந்ததே. (36)

தணிவருமருந்தாகமொடும்பர்தாம்
நணிவருமருந்தாகசைஇயசீர்
மணிவரன்றியவார்களைப்பொன்னெலா
மணிவரன்றியவார்கலியேற்குமே. (37)

வேகமாதலில்வேகவதியென்று
மாகம்வாய்ந்ததனால்வையையென்றுந்தா
ராகலாற்கிருதமாலையாமென்று
நாகர்முப்பெயர்நாட்டுநதியதே. (38)

ஆற்றுப்படலமுற்றும்.

ஆகக்கவி—74.

நாட்டுப்படலம்.

மோட்டுநாண்மலர்மேலவன்முந்தைநா
ணீட்டுமால்பதத்தாட்டியநீத்தமாய்க்
கோட்டகத்தியன்கும்பப்புனலுமாய்
நாட்டும்யாறிதுநாடினிப்பாடுவாம். (1)

வேறு.

நிலமளந்துகங்கூர்ந்துசங்கேந்தியநெடியமாலெனத்தோன்றிப்
புலமளந்தெழும்புதுப்புனல்பகீரதன்பூட்டுதேர்க்காலாற்றி
னலமளந்தவான்கங்கையைக்கொணர்ந்தெனநறியகால்குளந்தேக்கி
யலமளந்ததோண்மள்ளரேர்பூட்டிநின்றார்ப்பரால்வயலெங்கும். (2)

கருங்கடாவினம்பாண்டில்கள்பூண்டுழுங்கடுமுனைக்கொழுவேறச்
சுருங்கும்வாயுடைச்சங்கினமலறிவெஞ்சூலுளைந்துமிழ்முத்து
நெருங்குநெற்கரும்பெறிந்தவெண்முத்தமுநிரந்துகங்கரிந்தேற்றி
வருங்கணேறுதையாதுசங்கெடுத்தபோல்வரப்பெலாநிரைப்பாரால். (3)

செழியன்வாழியச்செழியனாணையிற்பெயுஞ்சீதவான்புயல்வாழி
பொழியுமும்பர்கோன்வாழியென்றுழவர்தாம்புகன்றுவித்தியசெந்நெல்
பழியகன்றகோப்பாண்டியனம்பெயர்ப்பனிமதிமரபென்னா
மொழியுமுற்கரன்சொற்படிபொன்மழைமுகில்சொரிவதுநேரும். (4)

சாற்றுமேழிசைமந்தரமத்திமதாரத்தின்சிறப்பென்ன
னேற்றமாய்முளைத்திலைக்கிலையுயர்ந்துயர்ந்தெழுந்தகோமளநாற்றைச்
சேற்றிலீர்த்தெடுத்தவனிமாதணிகுழற்சிப்பிடும்வாய்ப்பபோற்
றேற்றநாட்டினர்மதுறகர்பழகிகர்துழனிவாய்க்கடைமாதர். (5)

இதுமலர்ந்தபூவிதுமுகிழ்வீங்குபூவீங்கிதுமுகையந்தோ
பதுமராசியுங்குவளையுஞ்செங்கிடைப்பானலுங்களையாமோ
வதிர்களந்தனிற்பாண்டவப்பயிர்க்கெம்மானந்தனோர்குரவோரா
முதுகுலக்களையெடுத்தபோலெடுப்பதேழையல்வெனக்களைகட்டார். (6)

பருவம்பார்த்தெருத்தாதொடுநீருண்டுபணைத்தபண்ணையின்பைங்கூழ்
தருமம்பாத்திரமறிந்துசெய்தவர்குலந்தழைத்தல்போற்கிளைத்தோங்கி
மருவும்பார்க்கலியானையையடக்குவான்வாங்குமங்குசமென்ன
வுருவந்தோற்றிநெற்காய்க்குலைசாய்த்தலுமுவந்தனருழவோரே. (7)

வேறு.

செறுவெலாந்தலைசாய்த்துநெற்றூங்கியசெந்நென்
மறவிலாதபோல்வாய்ந்தநாளாய்ந்தரிவாணர்
முறுவல்வாணகைமுகத்தராயரிந்துபந்தடிபோ
லிறுவுமோர்நிலைச்சுமைக்கொடுநிமைக்குமுன்னடப்பார். (8)

வண்டுழாய்முகிலுலகினிவாய்ப்பெய்யேலென்று
பண்டுநான்முகன்பரப்பியதளிகையோதனம்போற்
கொண்டல்சூழ்வரைக்குவடுகீழ்ப்படுமெனவுயர்த்திக்
கண்டுவேய்ந்தநெற்போரினால்விளங்குவகளங்கள். (9)

காரிலோங்கியகமுகுசூழ்வல்லிமெல்லிலைகண்
டோரிடந்தனிற்பாகிலைபறித்துமென்றுவந்து
போரின்வேய்ந்தநெற்கதிர்களைக்கடாவடிப்போக்கிச்
சாரிசூழ்ந்துவைவேறுநெல்வேறெனச்சமைப்பார். (10)

எற்றுளோர்தமக்கிடாதவரினங்களைப்புவிமேற்
றூற்றுவாரெனத்தூற்றுவார்குவித்தநெற்றொகைகண்
டாற்றிடாமையாற்கிறியேயாறிலொன்றிறைக்கும்
போற்றுதெய்வதம்பூசுரர்பிதிர்க்கணாற்புலவோர். (11)

தானமானியமடப்புறஞ்சத்திரஞ்சாலை
யேனையோர்க்கும்வேறளித்தடிச்சியர்கள்பேறீந்தும்
போனகங்களால்வயிச்சுவதேவமுற்புரிந்தும்
ஞானியோர்தமக்கருத்திப்பின்னுண்பரந்நாட்டோர். (12)

ஆலையோதையுஞ்சாறடுமோதையுங்கமுகி
னோலையோதையுமடைத்தலைவாளைபாய்ந்துகுத்த
சோலைமாங்நலையோதையுஞ்சுரும்பினோதையுமாய்க்
காலையோதைபற்றாதெனப்பழித்தல்போற்கறங்கும். (13)

இரவினாரிருள்போல்வணைத்திராவணனிராம
சாவினோதத்திற்சமர்க்களத்துதிர்ந்தவான்றலைபோற்
பரவிசீடியதெங்கினொண்பழக்குலையினன்றேர்ப்
புரவிவன்குரத்திடறுபட்டுருவனபுவிமேல். (14)

உச்சிவெய்யவன்வெய்யில்கண்டறிகிலாவூர்சூழ்
பச்சைவாழையின்விழுக்கனியொழுக்கியபடுநீர்
மச்சமுண்பனநாவலங்கனிச்சுவைவயன்ஞெண்
டிச்சைகூர்ந்திளம்பேடையோடருந்துவவிருந்தே. (15)

தைத்திலங்கியதூண்டின்மீன்செருந்தியைத்தாக்கித்
தொத்திலங்கியதெங்கின்வெண்பாளையைத்துளக்கிப்
பைத்திலங்கியமாதுளம்பழந்தகர்த்தம்பொன்
னித்திலங்கண்மாணிக்கமென்றுக்குவநிலத்தை. (16)

மாலைப்பைங்குழனாககன்னியர்வளைக்கரத்தா
னீலப்பைங்கழல்பிலத்திருந்தாமொநிகரக்
காலைப்பங்கயமலர்தொறுங்களிச்சுரும்பரற்றி
மேலைப்பொங்குதேனருந்துவான்வீழ்ந்துவீழ்ந்தெழுமால். (17)

கரும்பைமட்டறக்குதட்டியச்சாறுபாய்கடைவாய்ச்
சுரும்புமொய்ப்பதைச்செவியசைத்தடிக்கடிதுறந்தே
யிரும்புடற்றினவடங்கமுட்காய்ப்புறத்திழுக்கிப்
பொரும்பகட்டினம்பலாநிழற்றுயிலுவபுயல்போல். (18)

படர்ந்ததொண்டையின்கனியினால்வகுளமும்பான
லடர்ந்தகாட்சியான்மாவுமாந்தளிரினாலசோகுந்
தொடர்ந்தசாயலாற்சண்பகத்தொகையுமின்குயிலாற்
கிடந்தமாதவிக்காடுமெய்ப்பருவத்துங்கிளைக்கும். (19)

கூந்தற்பூகமுந்தாழையைத்தகைந்திடக்குலைமே
லேந்திப்பாளையாற்கமுகையுந்தாழையீர்ந்திடுதல்
காந்தற்சோரஞ்செய்காமமென்கிழத்தியின்பொருட்டான்
மாந்தர்க்கோரொருவாளமர்விளைந்ததைமானும். (20)

உடங்குபேடைவாலொடுபிணைந்தாவின்மேலுறையுந்
திடங்கொள்வானரவேற்றின்வால்படப்படத்திரிந்து
தடங்கணீடுதாராக்குழாமெதிரெதிர்சருவி
நடஞ்செய்பின்னலங்கயிற்றுநாடகியர்போனடிக்கும். (21)

இழிந்தகாழியர்கொய்துகில்கல்லறைந்தெழுந்தும்
விழுந்துநண்டுளிதூற்றும்வெண்புயலெனவொருசார்
வழிந்ததேம்பொழிற்றிவலைபூடாடியவண்டு
பொழிந்தசூற்கரும்புயலெனத்தோன்றுமற்றொருசார். (22)

பூத்தமாதவிப்பந்தர்மேற்பூவைசூழ்ந்தகவ
வாய்த்தவன்னங்கள்பிணைதொறுந்தூங்கியமாவிற்
காத்ததோகைமுன்கலைபிலாமகளிர்சூழ்ந்திரப்ப
நீத்தநுண்கலைகுருந்துதூக்கியமுகினிகரும். (23)

கன்றுபொன்னிறந்தயங்குநாரத்தையீர்ங்கனிகள்
தென்றல்பாய்தொறுமரம்பைநெட்டிலையினூற்றிறந்து
மன்றமுடியுங்கிள்ளைவாய்குதர்ந்திடவயங்கிச்
சென்றகற்பினர்கொங்கைபோல்வடுவொடுந்தெரியும். (24)

முல்லையூடுபோய்வல்லரிதளைந்திடமுடக்கி
மெல்லிதாகியதவனகப்பாத்திவீழ்ந்துழக்கிச்
செல்லுமான்மழப்பிள்ளைகடிரும்பித்தம்முடன்மோந்
தில்லையேநமக்கிம்மணமெனவயிர்த்தேகும். (25)

மலர்ந்தசெண்பகக்கொம்பரும்வகுளவான்சினையுங்
கலந்துகாற்றடித்துராய்தலிற்காட்டுமுள்ளோசை
நலந்திளைத்துறுமாடவர்நயத்திடைநெருக்குண்
டலர்ந்தமாதரார்மோகவுல்லாஸமேயாமால். (26)

வேறு.

வள்ளைமங்கலப்பாட்டோதிமஞ்சள்குங்குமநாறுக்கித்
தள்ளுபூண்வெதம்பவோச்சுமுலக்கையந்தொழிலின்மாதர்
முள்ளினுற்கரும்புகிண்டுமுதிர்ந்தசாறுடைந்தவாறே
கள்ளுலாமாம்பலேற்றுக்கமுகெலாம்பாய்ச்சிக்கொள்வார். (27)

தென்றலந்தேர்மேலூர்ந்துசிலையெனக்கமுனைவாங்கி
மன்றலம்புன்னைமாரன்வண்டுநாண்மலரம்பாக
நின்றுசங்கன்னங்கான்றநெடுங்கண்ணீர்சொரிபூம்பொய்கை
யென்றபெண்ணரும்பின்கொங்கையிர்ந்திலைக்கரத்தும்வீசும். (28)

மடியெனவுலகம்பேசும்வழக்கினைலோதியாய்ந்திப்
படியினல்லாரில்வாசம்படைப்பனென்றெழுந்ததாழை
கடியவெள்ளேடுசேர்த்துக்கனவரியெழுதிமைக்காப்
பிடுதல்போல்வண்டினீட்டமிருந்தபூமலர்ந்துகாட்டும். (29)

கேட்டிசைவேந்தன்மேனிகிடந்ததாயிரங்கண்ணென்று
காட்டிசைத்திடுதல்கேட்டுநசைகொண்மேற்றிசையில்வேந்தன்
கோட்டிசைமேனிமுற்றக்கோடிகண்படைத்தாலென்னப்
பாட்டிசைவண்டுண்போதான்கிடைவனபடுநீரோடை. (30)

மந்தமாருதமும்பூங்காமணத்தையாண்டாண்டுபோகிச்
செந்தமிழ்ப்புலவர்பாட்டின்றிறத்தின்வெவ்வேறுகாட்டு
மைந்திணைப்பொருளும்வாரியார்த்தலைத்தெழுந்தவெள்ளம்
பைந்திசைக்கூத்தர்போலப்பரிசில்கொண்டிரையுமாதோ. (31)

அறம்பொருளின்பம்வீடென்றறைந்தநான்காணுடைத்தாய்
மறங்குறும்பச்சம்பொய்ம்மைமற்றவாம்பகைவேர்சாய்த்துப்
பிறங்குமூரிருக்கையாவும்பெற்றதேபெரிதென்றெண்ணுந்
துறந்துளோரியல்புபோலத்துயரொழிந்துளதுமன்னோ. (32)

தடந்திரைவாவிகாட்டுஞ்சங்கொடுபதுமமந்நீர்
குடைந்துளார்கொங்கைகாட்டுங்குருச்சிந்தாமணியைமற்றை
மடந்தைமாரெழிலேகாமதேனுவாக்காட்டும்வண்கா
விடந்தொறுஞ்சசியரம்பைகாட்டுமிந்திரனூரென்ன. (33)

வியன்மிகுசிற்பம்பத்துவிளைபயிர்செட்டுத்தூசு
குயிலுவம்பாகஞ்சாந்தின்கூட்டுநல்விழாச்சிறப்போ
டியலிசைநாடசங்கள்யாவுமிந்நாட்டுக்கொவ்வா
வயலுளநாட்டோர்செய்யினடங்கலின்புறம்பிட்டேற்பார். (34)

முதுதிரைக்கடல்சூழ்ஞாலமுழுவதுங்குடைக்கீழ்வைத்துப்
புதுமதிமரபிற்றோன்றும்புரூரவன்புரக்குந்தென்னாட்
டதிசயம்பெரிதென்றீண்டேயகத்தியன்வதிந்தானாக
வுததியுட்படியாவண்ணமுலகெலாமிருந்ததம்மா. (35)

ஒலிபுனற்கிருதமாலையுயிர்த்ததாயாகவையை
முலையருள்செவிலியாகமுதிர்ந்தருள்சுரந்துபோற்றக்
கலியெனும்பசிகணீங்கிக்காண்டொறும்வளர்ச்சிகாட்டி
வலியுறுகுடியுங்கோலுமைந்தர்போன்மல்குமன்றே. (36)

அங்கநூறிதங்கள்செய்யவநிற்பதின்மடங்குவாயு
மிங்கிதமுரைப்பவுள்ளமிதிற்பதின்மடங்குபொங்கத்
தங்களாலீயப்பெற்றோர்தயங்கிவேறிடஞ்செல்லாமே
நங்கள்பேறிதுவேயென்றெழுமையுநடாத்தவல்லார். (37)

பொன்னனார்போகமென்னப்புலனெலாம்போகமோங்குந்
தென்னாட்டணியின்சிர்மைதேவர்நாட்டிடத்துமுண்டோ
வன்னநாட்டிறைவன்வானத்தமரர்வேந்தனையுநீர்க்கோன்
றன்னையும்புறங்கண்டேழுமழையையுந்தளையிட்டானே. (38)

சத்தியவிரதன்வையைதனிற்றருப்பணஞ்செய்கின்ற
கைத்தலப்புனலினூழிகாலமோர்சேலதாகி
யத்திபுக்கிறந்தவேதமளித்துமாலந்தமாறற்
கித்தரையாளவேழாமனுப்பதமீந்தானன்றே. (39)

ஆதலாலவர்க்குமீனக்கொடியுமவ்வழியிற்றோன்று
மாதரம்பிகைக்குமீனவிலோசனப்பெயரும்வாய்ந்த
மூதுணர்முனிவர்க்கன்றிமொழியலாந்தரமோதென்னன்
பூதலத்தெறிநீர்வையைப்புதுமையுமதுரைமாண்பும். (40)

வேறு.

மணிசிறந்திளர்மாயவனிடத்துமான்மியத்தாற்
பணியின்வேந்தனும்பறவையின்வேந்தனும்பகைபோய்த்
தணியுமாறெனவேங்கையும்பசுக்களுந்தம்மி
லணுகிமேய்ந்துடன்றழீஇயொருதுறையினீரருந்தும். (41)

நாட்டுப்படலமுற்றும்.

ஆகக்கவி—115.

நகரப்படலம்.

தருமமோருருத்தாங்கிமால்பத்தியின்றலைப்பாட்
டொருமையோங்கியமாவிருஞ்சோலைசூழ்நாட்டின்
பெருமையாவரேபேசுவாரொருமுறைபெருமா
னருமைமாநகர்வளஞ்சிறிதறிந்தவாறுரைப்பாம், (1)

யோகமேதருமாந்தர்க்கும்பரானவர்க்கு
மேகவார்குழற்றிருவுக்குமாலுக்கும்விருப்பாம்
போகபூமியையுவணைப்பொங்குபாற்கடலை
நாகபாயலைப்போல்வதுகூடன்மாநகரம். (2)

அஞ்சனசுதனயன்பதம்பெறுகுவானுவி
மஞ்சுசூழ்வடமேருவிற்றவஞ்செயுமாபோல்
விஞ்சமேழ்கடற்கிறைவனூர்பதம்பெறல்வேண்டி
யிஞ்சிசூழ்கிடங்கருந்தவம்புரிவதாயிருந்த. (3)

கடக்கலுழ்ந்தெழுகயேந்திரற்காகமால்காய்ந்த
விடக்கர்தன்குலத்துடனடைந்தென்குறையெல்லா
மடக்கிபொறுத்தருளெனப்போற்றியாற்றவபோற்
கிடங்கினூடளாய்ப்பதலைவாய்முதலைகள்கிடக்கும், (4)

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1922-ம்ஹ மேமாத வரவு செலவு கணக்கு.

விவரம்.	வரவு 1922 மே			வரவு 1921 மே			விவரம்	செலவு 1922 மே			செலவு 1921 மே		
I General Section:							I General Section:						
(1) Donations, Contributions வகையில் வரவு ...	95	...	...				(1) Establishment:—						
(2) பாங்கில் போடப்பட்டுள்ள தொகைக்கு வட்டி வகையில் வரவு ...	1	2	10				(a) மானேஜ்மெண்டு ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	131	...	...			
(3) சங்கத்தில் அச்சிட்ட புத்தகங்கள் விற்றவகையில் வரவு. ...	69	13	...				(b) கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல் ...	107	...	...			
(4) Miscellaneous வரவு ..	...	9	...										
மொத்தம் ...	166	8	10	139	11	...	(c) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல். ...	45	...	...			

II Editorial Section:						
(1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தாவரவு	7	...	...			
(2) 'செந்தமிழ்'ப்பத்திரிகைக்குச் சந்தாவரவு ...	17	...	...			
(3) விளம்பர சார்ஜ் வரவு...	1	7	6			
(4) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ...	5	13	...			
மொத்தம் ...	31	4	6	103	1	...
III Press Section:						
(a) Printing Office:						
(1) சங்கம்அச்சாபீசில் நடந்த வேலைகளுக்கு அச்சுக் கூலி வரவு ...	191	5	...			

(2) Stationery, contingencies வகையிற்செல் ...	3	...	2			
(3) புத்தகங்கள் வாங்கிய வகையிலும், பத்திரிகைக்குச் சந்தா செலுத்திய வகையிலும் செலவு ...	4	2	...			
(4) தபால், தந்திவகையிற் செல்	16	9	...			
(5) சங்கம் சில்லறைவேலைகள் சம்பந்தமாகஅச்சுக்கூலிபைண்டிங் கூலிவகையிற் செலவு ...	21	12	...			
(6) Miscellaneous செலவு ...	...	5	...			
மொத்தம் ...	328	12	2	553	12	3
II Editorial Section:						
(1) சிப்பந்திகட்குச்சம்பளம்செல்	35	...	...			
(2) செந்தமிழ்ப் பத்திரிகை, சங்கப்பதிப்புப்புத்தகங்கள் சம்பந்தமாகக் காகிதம் அச்சுக்கூலி வகையிற் செலவு ...	49	1	...			
(3) தபால், தந்திவகையிற்செலவு	10	...	...			
மொத்தம் ...	94	1	...	162	10	6

(2) கூலிவேலைகட்காகக் காகிதக்கிரயம் வரவு ...	10	10	...			
(b) Binding Office:						
(1) சங்கம் பைண்டிங் ஆபீசில் நடந்த வேலைகளுக்குப் பைண்டிங்சார்ஜ் வரவு ...	93	...	...			
மொத்தம் ...	294	15	...	366	7	...

III PRESS SECTION:						
(a) Printing Office:						
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	172	14	5			
(2) மெஷீன் வகையரா ரிப்பேர் வகையிற் செலவு ...	21	...	...			
(3) Stationery Contingencies வகையிற் செலவு ...	33	10	1			
(b) Binding Office:						
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	32	3	4			
(2) Stationery Contingencies வகையிற் செலவு ...	57	2	3			
மொத்தம் ...	316	14	1	366	12	...

ஆகமொத்தம் வரவு ரூ ...	492	12	4	609	3	...	ஆக மொத்தம் செலவு ரூ ...	739	11	3	1088	2	9
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ ...	529	12	3	839	14	8	மாத முடிவில் மீதி இருப்புத் தொகை ரூ ...	* 282	13	4	365	14	11
ஆகமொத்தம் ரூ ...	1022	8	7	1449	1	8	ஆகமொத்தம் ரூ ...	1022	8	7	1449	1	8

*By C Pass Book 15—0 - 0
Cash on hand 267-13—4

282-13—4

Audited and found correct,

V. S. RAMASWAMI,

AUDITOR,
24—6—22.

LAKSHMINARAYANAN,

Manager,

MADURA TAMIL SANGAM.
2—6—1922.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1922-ம்வருஷ ஜுன்மாத வரவு செலவு கணக்கு.

விவரம்	வரவு 1922 ஜுன்			வரவு 1921 ஜுன்		
I General Section:						
(1) Donations, Contributions வகையில் வரவு ...	85	...	...			
(2) சொந்தத்தில் அச்சிட்ட புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	107	3	...			
மொத்தம் ரூ ...	192	3	...	51447	6	9

விவரம்	செலவு 1922 ஜுன்			செலவு 1921 ஜுன்		
I General Section:						
(1) Establishment:—						
(a) மானேஜ்மெண்டாபீஸிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	129	12	11			
(b) கலாசாலைமாணவர்கட்குப் போஷணைக்காகச் செல் ...	8	6	2			
(2) Stationery, contingencies வகையிற் செலவு ...	8	4	4			

II EDITORIAL SECTION:						
(1) "செந்தமிழ்"ப்பத்திரிகைக்குச் சந்தா வரவு ...	24	10	...			
(2) செந்தமிழ்ப் பழையதொகுதிகள் விற்ற வகையில் வரவு	10	2	...			
மொத்தம் ரூ ...	34	12	...	107	5	...
III PRESS SECTION:						
(a) Printing Office						
(1) சங்கம் அச்சாபீஸில் நடந்த வேலைகளுக்கு அச்சுக்கூலி வரவு ...	176	8	...			

(3) புத்தகங்கள் வாங்கிய வகையிலும், பத்திரிகைக்குச் சந்தா செலுத்திய வகையிலும் செலவு ...	18	12	...			
(4) தபால், தந்திவகையிற் செல்	9	10	...			
(5) சங்கத்துச் சில்லறைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டிங்கூலிவகையிற் செலவு	53	...	...			
மொத்தம் ரூ	227	13	5	50520	8	6
II EDITORIAL SECTION:						
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	35	...	...			
(2) செந்தமிழ்ப் பத்திரிகை, சங்கத்தில் அச்சிடும்புத்தகங்கள் சம்பந்தமாகக் காகிதம், அச்சுக்கூலி வகையிற் செலவு. ...	41	4	...			

(2) ஷ வேலைகட்காகக் காகிதக் கிரயம் வரவு ...	14	9	...			
(b) Binding Office						
(1) சங்கம் பைண்டிங் ஆபீஸில் நடந்த வேலைகளுக்குப் பைண்டிங் சார்ஜ் வரவு ...	112	6	...			
(2) Miscellaneousவரவு ...	...	4	...			
மொத்தம் ரூ ...	303	11	...	298	...	...

(3) தபால்,தந்திவகையிற் செல்	10	12	...			
மொத்தம் ரூ ...	87	...	...	299	5	...
III Press Section:						
(a) Printing Office.						
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	147	15	2			
(2) அச்சாபீஸ் உபயோகத்திற்கு Types வகையரா அச்சுவேலைகட்குரிய சாமான்கள் வாங்கிய வகையிற் செலவு ...	17	4	...			
(3) மெஷீன் வகையரா ரிப்பேர் வகையிற் செலவு ...	11	...	...			
(4) Stationery Contingencies வகையிற் செலவு ...	50	12	3			
(b) Binding Office						
(1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ...	29	7	7			
(2) Stationery Contingencies வகையிற்செலவு ...	50	3	9			
மொத்தம் ரூ. ...	306	10	9	317	8	...

ஆகமொத்தம் வரவு ரூ. ...	530	10	...	51852	11	9	ஆக மொத்தம் செலவு ரூ.	621	8	2	51137	5	6
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ. ...	282	13	4	365	14	11	மாதமுடிவில் மீதியிருப்புத் தொகை ...	191	15	2	1081	5	2
ஆகமொத்தம் ரூ. ...	813	7	4	52218	10	8	ஆக மொத்தம் ரூ ...	813	7	4	52218	10	8

Audited and found correct.

V. S. RAMASWAMI,

AUDITOR.

7—7—22.

LAKSHMINARAYANAN,

Manager.

MADURA TAMIL SANGAM.

2—7—1922

உ

தொல்காப்பியமூலம்.

பாக்கெட் எடிஷன்.

இடைச்சங்கத் தியற்றமிழிலக்கணநூலாகி, இற்றைநாள், தமிழ் முதலிலக்கணநூலாகவிளங்கித் தமிழரின் பண்டைய வழக்க ஒழுக்கங்களையும், தமிழ்நாட்டியல்புகளையும், சரித்திரக்கூறுபாடுகளையும் புலப்படுத்துவதாகிய தொல்காப்பியம் உரையுடன் யாவருக்கும் எளிதிற் கிடைத்தற்கு அருமையாயிருத்தலின், இயற்றமிழறிஞர்களின் வேண்டுகோட்படி, எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றதிகாரங்களிலடங்கிய 27 இயல்களுக்குரிய 1610சூத்திரங்களும் நுதல்பொருட்டலைப்புடனும், பாடபேதக்குறிப்புக்களுடனும் செவ்வனே ஆராய்ந்து அச்சிடப்பெற்றுள்ளன.

மதுரைத் தமிழ்ச்சங்கக் கௌரவ காரியதரிசியும், உயர்தரநியாய வாதியும், சென்னைச் சட்டசபையுறுப்பினரும் ஆகிய ஸ்ரீமத். T.C. ஸ்ரீநிவாஸையங்கார் பி.ஏ. பி. எல். அவர்களின் முன்னுரையுடன் கூடியது தமிழ்மொழி யாராய்ச்சியாளர்களால் திருத்தமான சுத்தப்பதிப்பெனப் பெரிதும் பாராட்டப்பட்டிருப்பது. செய்யுட்பாடக்கோவை, அற்புதக் கிணையாழிமுதலியவற்றின் ஆசிரியரும், பாண்டியநேசன் பத்திராசிரியருமாகிய திருத்தகு. பு. சிதம்பரபுன்னைவனநாதமுதலியாரவர்களால் பதிப்பிக்கப்பெற்றது.

சங்கங்கட்கும், வாசகசாலைகட்கும், பண்டிதர்களுக்கும் மிகவும் இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே தயாரிக்கப்பட்டுள்ளன. உயர்ந்த கிலிட் பயிண்டு விலை ரூபா. 1—8—0. தபாற்கூலி வேறு.

வேண்டுவோர் அடியிற்கண்டவிலாசத்துக்கு விரைவில் எழுதிப் பெற்றுக்கொள்க.

P. N. சிதம்பரமுதலியார் அன் கோ.,

புஸ்தகவியாபாரம், புதுமண்டபம், மதுரை.